களைப் போலப் பூமியிலிருந்து போய்விட்டார் என்று சொல்வது நியாயமா?

விடை.—இவர் எங்கும் பரவியிருக்கும் விஷ்ணுவாகையால், இவருக்குப் போக்கு வரவென்பதே கிடையாது. இவர், எக்காலத்திலும் உலகமெங்கும் இருப்பவர். ஆனால் அதர்மம் மேலிட்டு, தர்மம் அடங்குங்கால், எங்கும் பரவிய மஹாவிஷ்ணு அவதாரமெடுப்பது வழக்கம். "யுகங்கள் தோறும் நான் அவதாரங்கள் எடுக்கிறேன்" என்று, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா கீதையில் சொல்லியிருக்கிறார். ஆகையால் மஹாவிஷ்ணுவாகப் பார்த்தால், ராமர் ஸதா எங்கும் எப்பொழுதும் இருக்கிறார். அவதாரமாகக் கொண்டால், எப்பொழுதும் மாறிமாறி லோகோபகார்த்தமாக இங்கு வந்துகொண்டு இருப்பாரே ஒழிய இவ்வுலகத்தை விட்டுப் போய்விட்டார் என்று சொல்ல இடமில்லை. ஆகையால் ராமர் பரமபதம் போனதாக இங்குச் சொல்லியபோதிலும், நம்முடைய வழிபடும் கடவுளாக ராமர் எப்பொழுதும் இங்கு இருக்கவே இருக்கிறார். இதை அறிந்து இந்த ஸ்ரீராமருடைய கதையைப் படிப்பவருக்கும் உயர்ந்த ஞானமுண்டாகும்.

அநுபந்தம் I

ராமாயணத்திலிருந்து வெளியாகும்

நீதிகள்.

I வெளிப்படையான நீதிகள்

1. மஹான்களுக்கு, கோபவேளையில் வரும் சொற்கள் கூட சிறப்பு வாய்ந்தனவாய் இருக்கும் என்பது வால்மீகி மஹரிஷி வேடனைச் சபிக்குங்கால் வெளியிட்ட ச்லோகத்தால் நாம் அறியலாம்.

2. மஹா பரிசுத்த ஆத்மாக்களான மஹான்கள், ஒரு வேளை தமது மேலான நிலையிலிருந்து தவறிவிட்டபோதிலும், அவர்களது தவறுதல்கூட பரோபகாரமாகவே முடியும் என்பது ரிஷ்யசிருங்கரது கதையால் விளங்கும்.

3. மஹான்களது அவதாரத்தால், உலகமே மேன்மை அடைந்து செழிக்கும் என்பது ராமர் பிறந்ததும், உலகம் இருந்த நிலைமையால் நாம் அறிந்துகொள்ள வேண்டியது.

4. சிறப்பு வாய்ந்த பெரியோர்கள் ஸஹாயமொன்றும் இல்லாமலே பெரிய காரியங்களை ஸாதிப்பார்கள் என்பதை, ராமர் இளமைப் பருவத்தில் தாடகையைக் கொன்று விசுவாமித்திர யாக ஸம்ரக்ஷணம் செய்ததும், மிதிலையில் தனுஸை அலக்ஷியமாய் ஒடித்ததும், நன்றாக விளங்கும்.

5. சிறந்த ஞானிகளது நோக்கம் ஒருவராலும் அறியமுடியாது என்பது அஸமஞ்சன் என்ற ஸகரராஜனது பிள்ளையின் நடத்தையால் நமக்குத் தெரியவருகிறது.

6. துள்ளின மாடு பொதி சுமந்து கஷ்டப்படும் என்பது ஸகரபுத்ரர் கர்வத்தோடு கபில வாஸுதேவரைப் பிடிக்கப் போய் சாம்பலாய் விழுந்த கதையிலிருந்தும் கர்வத்தோடு வந்த ஆகாசகங்கை, பரமசிவன் ஜடையில் அகப்பட்டுத் தத்தளித்த கதையிலிருந்தும், ஜன்னு ரிஷியின் வயிற்றிலடங்கி கங்கை தத்

தளித்த கதையிலிருந்தும், பரசுராமர் ராமரால் கர்வபங்கம் அடைந்த கதையிலிருந்தும் நமக்குத் தெரியவருகிறது.

7. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்ற கருத்து பகீரதனது முயற்சியால் முடிவில் கங்கை பூமிக்கு வந்த கதையிலிருந்தும், விச்வாமித்திரருக்கு விடாமுயற்சியால் பிராஹ்மண்யம் கிடைத்த கதையிலிருந்தும் வெளிவரும்.

8. நல்ல காரியங்கள், கோபம் முதலிய கெட்ட பிடிவாதங்களிலிருந்து தொடங்கியபோதிலும், முடிவில் நன்மையாகவே முடியும் என்பது விசுவாமித்திரர் வசிஷ்டரால் அடைந்த தோல்விக்காகக் கோபங்கொண்டு பிரம்மண்யமடைய தபஸ் செய்த கதையால் விளங்கும்.

9. அடாது செய்தவர் படாதுபடுவர் என்பது விச்வாமித்திரர் வசிஷ்டரை அநியாயமாய் எதிர்த்துப் பட்டபாட்டால் எளிதில் விளங்கும்.

10. தவத்தின் மகிமையை, விச்வாமித்திரர் திரிசங்கு விஷயத்தில் செய்த விசித்திரச செயல்களால் நாம் அறியலாம்.

11. பெரியோரது ஸங்கதமான விசேஷத்தால் உண்டாகும் மேன்மை, ராமர் பாததூளியால் பாவம் நீங்கி எழுந்த அஹல்யையின் கதையிலிருந்து விளங்கும்.

12. புத்ரனிடத்தில் பிதா (தசரதரைப்போல்) அன்பாய் இருக்கவேண்டியது.

13. பிதாவினிடத்தில் புத்ரன் (ராமரைப்போல்) பக்தியாய் இருந்து அவர் சொல்லை மீறாமல் நடக்கவேண்டியது.

14 ராஜாவாயிருந்தாலும் (தசரதரும் ராமரும் நடந்ததுபோல்) மஹான்களுடைய ஆக்ஞைக்குட்பட்டு நடக்கவேண்டியது.

15. எவ்வளவு நல்லவர்களாயிருப்பினும், கெட்டவரோடு ஸஹவாஸம் செய்தால் அவர் குணம் மாறிவிடும் என்பதை, கைகேயி கூனியால் கெட்ட கதை தெரிவிக்கின்றது.

16. நல்லவர்கள் வாயால் மாத்திரம் பிதற்றிவிட்டுச் சும்மாயிராது, காரியத்திலும் நடத்திக்காட்டி விடுவார்கள் என்ற சங்கதி பரதன் சித்திரகூடத்திற்குப் போன கதை காட்டுகின்றது.

17. தமயனிடத்தில் தம்பி (லக்ஷ்மணரையும் பரதனையும்

போல்) விச்வாஸம் வைத்து, அவர்க்கு அடங்கி நடக்கவேண்டியது.

18. புருஷனுக்கு ஸ்திரீ (ஸீதையைப்போல் வணங்கி, (ராமரும் ஸீதையும் போல்) இருவரும் அன்னியோன்னியமாய் இருக்கவேண்டும்.

19. எத்திறத்தாரிடத்தும் (ராமர் குஹனிடம் இருந்தது போல்) ஸ்நேகிதத்தைப் பரிபாலனம் செய்து உண்மை பாராட்டவேண்டியது.

20. பெரியோரது கோபம் சீக்கிரம் மாறிவிடும் என்பது காகாஸுர விருத்தாந்தத்தால் வெளிவரும்.

21 பொறுமையுடையோர் சிறுமையடையார் என்பது சரபங்கர், சபரி ஆகிய இவர்களது கதைகளால் விளங்கும்.

22. கடுஞ்சொற்களால் விளையும் தீங்குகள், ஸீதை லக்ஷ்மணரை கடிந்துபேசி, ராவணன் கையில் சிக்கிக்கொண்ட கதையால் வெளியாகின்றது.

23. ஒருவன்மேல் உண்மையான அன்பு வைத்திருக்கும் சான்றோர், தமது உயிரைக் கவனியாது அவனுக்கு உதவிசெய்ய பிரயத்தனப்படுவர் என்பது ஜடாயு ராமருக்காக ராவணனை எதிர்த்து மாண்ட கதையால் தெரியவருகிறது.

24. நம்மை நம்பினவர்களை (ராமர் ஸுக்ரீவனைக் காப்பாற்றியதுபோல்) கை தூக்கிவிடவேண்டியது.

25. மழை காலம் முடிந்த பின்னும் ஸுக்ரீவன் ராமர் விஷயத்தில் அசிரத்தையாய் இருந்தது, ஐசுவரிய மதம் வெகு கெட்டது, எப்படிப்பட்ட நல்லவர்களையும் மயக்கிவிடும் என்பதை விளக்கும்.

*26. எஜமான் விஷயத்தில் (ஹனுமார் நடந்துகொண்டது போல்) துரோகமின்றி நடக்கவேண்டியது.

27. பக்தியால் ஆகாதது ஒன்றுமில்லை என்பது ஹனுமார் ஸமுத்திரத்தைத் தாண்டிச் சென்றதும், ஸஞ்சீவி பர்வதம் கொண்டு வந்ததும் நன்றாய் விளக்கும்.

28. அதிக ஸந்தோஷத்தால் உண்டாகும் கெடுதிகளைக் குரங்குகள் மதுவனத்தை அழித்த கதையிலிருந்து நாம் அறிகிறோம்.

29. "கொட்டினால் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி" என்று உலகம் நம்மை எண்ணிவிடும் என்பது, ராமரது வேண்டுகோளுக்கு முதலில் இசையாது பின்பு கஷ்டப்படுத்துங்கால் வெளிவந்த ஸமுத்ரராஜன் கதையால் தெளிவாய் அறியலாம்.

30. நீயே கதி என்று சரணம் அடைகிறவர்களுக்கு (விபீஷணருக்கு ராமர் உபகாரம் செய்ததுபோல்) நாம் அநுகூலம் செய்யவேண்டியது.

31. சக்தியிருக்கும்போது (ராமர், ராவணன் விஷயத்திலும், ஸமுத்ர ராஜன் விஷயத்திலும் காட்டியதுபோல்) நமக்குப் பொறுமை இருக்கவேண்டியது.

32. பெரியோர்கள் சண்டையைக் கடைசி உபாயமாக வைத்துக்கொள்வார்கள் என்பதை, ராமர், ராவணனை முதல் தரம் கொல்லாது ஸீதையைத் திரும்பத் தம்மிடம் கொண்டுவந்து விட்டு அவன் பிழைத்துப் போகட்டும், என்று விட்ட கதை நன்றாய் விளக்கும்.

33. ஸ்திரீ தனது பாதிவிருத்தியத்தை (ஸீதை அசோகவனத்தில் காப்பாற்றியது போல்) மிகுந்த ஜாக்கிரதையோடு காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

34. ஸீதையை ராமர் கண்ட உடன் அங்கீகரியாது, நன்றாய்த் தெளிந்தபின்பு அங்கீகரித்ததனால், அரசன் எவ்வளவு பரிசுத்தனாயும் தான் செய்யவேண்டிய கார்யத்தை ஐயம் திரிபற தெரிந்தவனாயும் இருக்கவேண்டும் என்பது எளிதில் விளங்கும்.

35. 'துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனம்' (ராமர் செய்ததுபோல்) நம்மாலியன்ற மட்டும் செய்யவேண்டியது.

36. சொன்ன வாக்கை (ராமர், ஸுக்ரீவ விபீஷண பரதர்கள் விஷயத்தில், பிரதிக்ஞைப்படி நடந்து கொண்டதுபோல்) ஸத்தியமாய் நிறைவேற்ற வேண்டியது.

37. பலவானாய் இருந்தபோதிலும் அவன் கெட்டவனாய் இருந்தால், அவனது குணத்தாலேயே தனது பலத்தைக் குறைத்துக்கொண்டு, கடைசியில் அழிந்துபோவான் என்பது, மஹாபலிஷ்டனான ராவணன் தனது துன்மார்க்கத்தால் ஆங்காங்குச் சாபங்களை வாங்கிக்கொண்டு, கடைசியில் ராமரால் இறந்ததினால் தெரியவருகிறது.

38. வல்லவனுக்கு வல்லவன் உலகில் எப்பொழுதும் உண்டு. ஆகையால், நாம் எவ்வளவு மேலானவர்களாய் இருந்தாலும், கர்வப்படுவதற்குக் காரணம் இல்லை. இப்படி முன் சொன்ன உண்மையை யறியாமல் கர்வப்பட்டால், திக்விஜயம் செய்துவந்த பலவானான ராவணன் கர்வப்பட்டுக் கார்த்தவீர்யார்ஜுனன், வாலி, சுவேதத்வீபவாஸிகள் ஆகிய இவர்களிடம் பட்டபாடு படுவோம்.

39. அநேகர் நம்மைப் பின்பற்றி நடக்கத்தக்க நிலைமையை நாம் அடைந்தால், நமது மனதிற்கு விரோதமாய்ப் பரோபகாரார்த்தம் சில காரியங்கள் அவசியம் செய்யவேண்டி வரும். ஆகையால் இந்நிலைமையிலிருப்பது எளிதல்ல என்பது, ராமர் தமது மனதிற்கு விரோதமாய் ஸீதையைத் தியாகம் செய்யும்படி வந்ததால் நன்றாய் விளங்கும்.

40. முன் சொன்னதிலிருந்து, தர்ம ஸங்கடங்கள் வந்த காலத்தில், மேலான தர்மத்தைக் கைக்கொண்டு தாழ்ந்ததைத் தியாகம் செய்யவேண்டும் என்று தெரியவருகிறது. இது ராமர் லக்ஷ்மணரைத் தியாகம் செய்த விஷயத்திலிருந்தும் வெளியாகிறது.

41. அரசர்கள் கொஞ்சமாவது தமது ராஜ்ய விஷயத்தில் அஜாக்ரதையாய் இருப்பாரேயானால் (நிருகன் ஓணான் கஷ்டப்பட்டதுபோல்) கஷ்டப்படவேண்டி வரும்.

42. பொறுமை யுடையோர் கிடைப்பதரிது என்பது யயாதி கதையால் விளங்குகிறது.

43. பலருக்குப் பொதுவாயிருக்கும் ஸொத்துக்களோடாவது, தேவ ஸொத்துக்களோடாவது பழகுதல் மிகக்கஷ்டம். எவ்வளவு ஜாக்கிரதையாய் இருந்தாலும், பாபம் உண்டாய்விடும் என்பது ஸர்வார்த்தஸித்தனும் நாயும், என்ற உபாக்கியானத்தால் விளங்குகிறது.

44. ஜாதி தர்மத்தை மீறி நடத்தல், குழப்பத்திற்குக் காரணமே ஒழிய ஜனங்களுக்கு ஒரு ஸுகத்தையும் உண்டாக்க மாட்டாது என்பது ஜம்புகன் என்ற சூத்திர முனியின் கதையால் விளங்கும்,

45. ராமருக்கு அகஸ்தியர் சொன்ன சுவேதனது கதையால், பரோபகாரத்தைத் தன்னுயிருள்ளமட்டும் செய்யாது

தபஸை மாத்திரம் செய்வது பிரயோஜனமில்லை என்பது விளங்குகிறது.

46. நமது உண்மை நிலையை நாம் அறிந்தால், உடனே சகல துக்கங்களும் நிவர்த்தியாகும். ஸ்வரூப ஞானம் துக்க நிவர்த்திக்குத் தகுந்த உபாயம் என்பதை, ஸீதையைப் பிரிந்து துக்கத்தையும் கோபத்தையும் அடைந்திருந்த ராமருக்கு, பிரம்மாவால் தமது நிஜஸ்வரூபம் ஞாபகம் வந்தவுடன் துக்கம் நீங்கிய கதை நன்கு விளக்குகிறது.

II ஸூக்ஷ்ம விஷயம்

கடவுளைப் பக்திசெய்து பரமபதமடைய அநேகம் வழிகள் இருக்கின்றனவென்றும், அதில் ஏதாவது நமக்குக் குரு உபதேசித்த வழியைப் பின்பற்றி நாம் நல்ல கதியை அடைய வேணடும் என்றும் ராமாயணத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டியது. ராமரைப் பரும்பொருளாகக் கொள்ளலாம். இதற்கு ஆதாரம் ராம ரஹஸ்யோபநிஷத்தில் ராம என்ற நாமத்தைத் தாரக மந்திரமாக எடுத்துச்சொல்லி இருக்கிறது. மேலும் சிவன் பார்வதிக்கு,

श्रीराम राम रामेतिरमे रामे मनोरमे ।
सहस्रनामतत्तुल्यं रामनाम वरानने ॥

என்று எடுத்துச்சொல்லி இருக்கிறார். ராமரைப் பக்திசெய்து நல்லகதியடைந்த ஸுக்ரீவன், லக்ஷ்மணர், ஜடாயு, விபீஷணர், ஹனுமார், குஹன், ஸீதை, மஹரிஷிகள், சரபங்கர், சபரி, காகாஸுரன், பரதர் முதலியவர்களை விதம் விதமாய்க் கடவுளைப் பக்தி செய்தவர்களாகக் கொள்ளலாம். இக்கருத்தை உள்ளடக்கியே **பக்தி ஸூத்திரத்தில்** நாரதர், 'மஹிமாஞானத்தால் வருவது, தர்ம ஞானத்தால் வருவது, உபாஸனக்கிரமத்தால் வருவது, தாஸ்யபாவத்தால் வருவது, ஸஹ்யபாவத்தால் வருவது, ஸ்நேக (நாயகிநாயக) பாவத்தால் வருவது, தான் பகவானுடைய குழந்தை என்ற பாவத்தால் வருவது, ஆத்ம நிவேதனத்தால் வருவது, தாதாத்மிய பாவத்தால் வருவது, துக்கத்தால் வருவது, பிரிவாற்றாமையால் வருவது, ஆகிய இப் பதினொரு விதங்களால் ஓரே பக்தி பதினொரு விதமாகக் காணப்படும்' என்று எடுத்துக் காட்டி இருக்கிறார். ஆகவே ராமாயணமானது இப்படி அநேகவிதமாய் ஓரே பரம்பொருளைப் பக்தி

செய்து பரமபதமடைந்த மஹான்களது சரித்திரமூலமாய் நமக்குத் தருந்த வழிபாட்டைப் பின்பற்றி நற்கதியடைய நம்மைத் தூண்டுகிறது. மேலும்,

एकं सद्विप्रा बहुधा वदन्ति

அதாவது பரம்பொருள் ஒன்றேயாயினும், (ஜனங்களது மனோ தர்மத்தின்படி பக்திசெய்து யாவரும் உய்யும்பொருட்டு) மஹான்கள் அதற்கு அநேகம் பெயரிட்டழைக்கிறார்கள் என்ற வேத வாக்கியத்தின் கருத்தை உள்ளடக்கி, மதத்துவேஷம் என்பதை வேரோடு கல்லி, ராமாயணம் நம்மை நமக்குத் தக்கபடி விருத்தியடையும்படி செய்து, கடைசியில் மோக்ஷத்தை அடையும்படி செய்கிறது. (ராமாயணத்தின் உட்பொருளை **அத்யாத்ம ராமாயணம், ஆநந்த ராமாயணம்** என்ற கிரந்தங்களில், மஹா ரிஷிகள் வெளியிட்டிருக்கிறார்கள். **அவைகளின் சுருக்கத்தைப் பின்வரும் *அநுபந்தத்திற் காண்க)** ஆகவே **இவ்விதிஹாஸத்தைக் கவனமாய் வாசித்தறிவோர்க்கு மதத்துவேஷம் முதலிய கெட்ட குணங்கள் அணுகாது, பக்தி என்பது அதிகரித்துக் கடையில் நிரதிசய ஆனந்த ரூபமாகிய முக்தி கைகூடும் என்பதற்குச் சந்தேகமில்லை.**

श्रीरामचन्द्राय परब्रह्मणे नमः.

ஸ்ரீ ராமசந்த்ராய பரப்ரஹ்மணே நம:



அனுபந்தம் 2

கம்ப ராமாயணத்தில் காணப்படும் மாறுபாடுகள்

பாலகாண்டம் 1

1. **யாக ஏற்பாடு**—தசரதர், தமக்குப்பின் தமது நாட்டை ஆண்டு ஜனங்களை ஸுகப்படுத்தத் தகுந்தவர் தம் மரபில் ஒருவரும் இல்லையே என்று தமது குலகுரு வசிஷ்டரிடம் சோகமாக வருந்திக் கூறினார். அப்பொழுது அவர் கொஞ்ச நாழிகை ஸமாதியிலிருந்தார். அவர் உள்ளத்தில் முன்காலத்தில் தேவலோகத்தில் நடந்த ரஹஸ்யமொன்று அப்பொழுது உதித்தது. தேவதைகள் ராக்ஷஸர்கள் கொடுமை பொறுக்கமாட்டாது பிரம்மாவால் நடத்தப்பட்டுத் திருப்பாற்கடல் சென்று மஹாவிஷ்ணுவைத் துதிக்க அவர் பிரத்யக்ஷமாகி, எல்லோரையும் வானரராகி பூமியில் பல பாகங்களில் வளரும்படி சொல்லித், தாம் தசரதர் குமாரனாக அவதரித்து வானரர்களை ஸஹாயமாகக் கொண்டு ராக்ஷஸர்களைக் கொன்று அவர்கள் பயம் தீர்ப்பதாகச் சொன்ன விஷயம் தான அப்பொழுது வசிஷ்டருக்கு ஞாபகம் வந்த தேவரஹஸ்யம். உடனே கண்விழித்துத் தசரதரைப் புத்ரகாமேஷ்டி யாகம் செய்யும்படி தூண்டி அவருக்கு அங்க தேசாதிபதியின் மாப்பிள்ளையான ரிச்யசிருங்கரைக் கொண்டு அதை நடத்த வேண்டும் என்று வழியும் சொல்லி முடித்தார்.

2. **புத்ரகாமேஷ்டி முடிவு.**—முடிவில் அக்னியிலிருந்து ஒரு பூதம் புறப்பட்டுத் திவ்யான்னத்துடன் கூடிய ஒரு தட்டைக் கொண்டுவந்து பூமியில் வைத்துவிட்டு அக்னியில் மறைந்தது. மஹரிஷி எடுத்துக்கொடுக்க அதைத் தசரதர் வாங்கி ஒரு பாகம் கௌஸல்யைக்கும், மற்றொரு பாகம் கைகேயிக்கும், இன்னும் ஒருபாகம் ஸுமித்திரைக்கும் கொடுத்து, தட்டில் மிகுதியிருந்தவற்றைச் சேர்த்து ஸுமித்திரைக்கே கொடுத்துவிட்டார்.

3. **பலை அதிபலை உபதேசித்தது.**—ராம லக்ஷ்மணர்களைத்-

தசரதரிடமிருந்து பெற்றுக்கொண்டு காமாச்ரமத்தில் தங்கிய பின்னர் விச்வாமித்ரர் அவர்களை அழைத்துக்கொண்டு ஒரு கொடிய பாலைவனம் வந்து அடைந்தார். அதன் கொடுமையை அவர்களால் ஸஹிக்க முடியாதெனக் கருதி அவர்களுக்கு இம் மந்திரங்களை உபதேசித்தார். இதை அவர்கள் உச்சரித்து வழி நடக்கத் தொடங்கியதும் பாலைவனம் ஜில்லென்று குளிர்ந்து காணப்பட்டது. இவ்வனத்திலிருந்த தாடகையை வதம் செய்த பிறகு தான் விச்வாமித்ரர் ராமலக்ஷ்மணர்களுக்கு அநேக அஸ்திரங்களை உபதேசித்தார். சித்தாச்ரமம் சேரும் வரையில் உள்ள ஸ்லோகங்களுள் சிற்சில முன்பின்னாகவும் காணப்படுகின்றன.

4. **ஸமுத்ரமதனம்**—இதற்குக் காரணமாக இங்கு ஒரு கதை காணப்படுகின்றது. முன் ஒரு காலத்தில் திருப்பாற்கடலில் பள்ளிகொண்டிருந்த ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் பாத கமலத்தருகில் வீற்றிருந்த மஹாலக்ஷ்மியை ஒரு கந்தர்வ ஸ்திரீ நமஸ்கரித்துத் துதிக்க, அவளுக்கு லக்ஷ்மி ஒரு வாடா தாமரைப் பூமாலையைக் கொடுத்தாள். அவள் அதை விநயத்துடன் வாங்கித் தனது வீணையில் மாட்டிக்கொண்டு ப்ரஹ்மலோகம் வந்தாள். அங்கு இருந்த தூர்வாஸ மஹரிஷி இவளுக்குக் கிடைத்த பாக்கியத்தை உணர்ந்து இவளை ஸ்துதித்தார். இவள் ஸந்தோஷித்து மாலையை தூர்வாஸருக்குக் கொடுத்தாள். அவர் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு இந்திரலோகம் வர அங்குத் தனது பரிவாரங்களோடு இந்திரன் ஊர்வலம் வரக்கண்டார். உடனே அணுகித் தமக்கு அருமையாகக் கிடைத்த மாலையை அவர் இந்திரனிடம் கொடுத்தார். அவன் அதை வாங்கி அலக்ஷ்யமாக ஐராவதத்தின் மஸ்தகத்தில் போட அது தனது தும்பிக்கையால் அதை எடுத்துக் காலால் தேய்த்துவிட்டது. அப்பொழுது அடங்காக் கோபமுற்று, தனமதத்தால் கண்மூடியாக இருந்த இந்திரனை நோக்கி 'உன் ஐச்வரியங்கள் எல்லாம் மறையக்கடவது' என்று தூர்வாஸர் சபிக்க, ஐராவதம், ரம்பை முதலியன கடலுள் மறைந்துவிட்டன. இவைகளை எடுக்கப்பின்னர் ஸமுத்திர மதனம் நடந்தது.

5. **பகீரத ப்ரயத்னம்.**—பகீரதன் தன் குலகுருவாகிய வஸிஷ்டரால் தனது மூதாதைகள் ரிஷிகோபத்தால் சாம்பலாகும்படி நேர்ந்த கொடுமையை உணர்ந்து அவர்களைக் கரையேற்றும் வழி என்ன என்று வினவினான். அதற்கு அவர் 'நீ பிரஹ்மாவை குறித்துத் தவமிரு. அவர் உனக்கு உபாயம் கூறுவார்' என்றார். உடனே பகீரதன் ராஜ்யத்தை மந்திரியிடம் ஒப்புவி

த்து அவ்வாறே 10,000 வருஷம் தவமிருக்க முடிவில் பிரம்மா தோன்றி ‘உன் மூதாதைகள் எலும்புகள்மேல் கங்கை பாய்ந்தோடும்படி செய்தால் அவர்களுக்கு நற்கதி உண்டு. கங்கை வரும் பொழுது அவள் வேகத்தைத் தடுக்க மஹாதேவரால் தான் முடியும். அவரை நோக்கித் தவமிரு’ என்று கூறி மறைந்தார். 10,000 வருஷம் அவ்வாறே பகீரதன் செய்ய பரமசிவன் தோன்றி ‘உன் இஷ்டப்படி கங்கையின் வேகத்தைத் தடுத்து விடுகிறேன்’ என்று ஒப்புக்கொண்டு மறைந்தார். பின்னர் பகீரதன் கங்கையைக் குறித்து 5000 வருஷம் தவமிருக்க, அவள் ஒரு பெண் உருவுடன் தோன்றி ‘பரமசிவன் விளையாட்டாகக் கூறியிருக்கலாம், அவர் உறுதிமொழி கொடுப்பாரா கேள்’ என்று கூறிப்போனாள். மறுபடி சிவனை உத்தேசித்து 2500 வருஷம் தவமிருந்து அவர் வந்ததும் கங்கை கூறியதைக் கூறக் கங்கை எவ்வளவு வேகத்துடன் இறங்கியபோதிலும் தாம் அவளைத் தடுத்திறக்குவதாக வாக்களித்தார். முடிவாகக் கங்கையை உத்தேசித்து 2500 வருஷம் தவம் செய்து 30,000 வருஷம் தவம் முடியுங்கால் கங்கை இந்திரலோகம் அதிரும்படி இரைச்சலிட்டுக்கொண்டு இறங்கி பரமசிவன் ஜடையுள் மறைந்து, அவரால் வெளிவிடப்பட பகீரதனோடு புறப்பட்டாள்.

6. **மிதிலாப் பிரவேசம்.**—விசுவாமித்திரரால் வழிகாட்டப்பெற்று ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் மிதிலா நகரத்துட் புகுந்து ராஜவீதிகளில் உலாவிக்கொண்டு, ஸீதாதேவி மாளிகைக்கு அருகாமையில் வருகையில் தற்செயலாய் நகர் விநோதம் பார்க்க ஸீதையும் உப்பரிகைமேல் வந்தாள். ராமரும் ஸீதையும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட மாத்திரத்தில் இருவர் மனமும் ஒன்றுபட்டு ஒருவர்மீது ஒருவர் காதல்கொண்டுவிட்டனர். இந்த ஸந்தர்ப்பம் முதல் கல்யாண முடிகிறவரையில் 16 வயதுக்கு உட்பட்ட ராமரைக் கம்பர் காவ்ய விஷயத்திற்காக வயதுவந்த தலைவனாகவும், ஸீதையை நல்ல யுவதியாகவும் கருதியே கூறுகிறார்.

7. **ஜனகஸபை.**—இவர்கள் ஜனகஸபையை அடைந்ததும் அங்கு புரோஹிதரான சதானந்தர் தமது தாய் அஹல்யை ராமரால் சாபம் நீங்கிய கதையைக் கேட்டு மகிழ்ந்து ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு விச்வாமித்திரர் கதையை விஸ்தாரமாக எடுத்துரைத்தார். பின்னர் ருஷியும் ராஜகுமாரர்களும் தமக்கு ஏற்பட்ட விடுதியில் தங்க அன்றிரவு முழுவதும் ராமருக்கு ஸீதை உணர்ச்சி மாறுபடவே இருந்ததாம். மறுநாள் காலை இவர்கள்

லைப்பக்கு வர ஜனகர் 'இராஜகுமாரர்கள் யார்?' என்று கேட்டார். அவர்கள் குலமாகிய இக்ஷ்வாகு குலத்தின் சிறப்பை ஒழுங்காகக் கூறி 'இவர்கள் அயோத்தியில் இப்பொழுது அரசாண்டு வரும் தசரத சக்கிரவர்த்தியின் குமாரர்கள். இவர்களிடம் என் பிராணனைவிட எனக்கு அதிக அன்பு' என்று முடித்தார். அப்பொழுது ஜனகருக்கு தம் ஸீதையை ராமருக்குக் கொடுத்துவிட்டால் நலம் என்று தோன்றியும் வில் ஞாபகம் வந்து அவரை வருத்தியது அப்பொழுது வில்லை எடுத்துவர அநேகரை அனுப்பிவிட அதன் சிறப்பைச் சதானந்தர் இவர்களுக்கு விஸ்தரித்துக் கொண்டிருந்தார்.

8 **ஸீதா கல்யாண நடபடல்**—வால்மீகி ராமாயணத்தில் மிகச் சுருக்கமாகவிருக்கும் இப்பாகத்தை கம்பர் மிக விரிவாகக்கூறியிருக்கின்றனர் தசரதர் ராமர் வில்லொடித்த செய்தி கேட்டுத் தமது பரிவாரங்களோடு மிதிலைக்குப் புறப்படும் சிறப்பை **எழுச்சிப்படலத்திலும்**, அன்றுமாலை வழியிலிருந்த சந்திர சைலம் வந்து இரவைக் கழித்த விதத்தை **வரைக்காட்சிப்** படலத்திலும், மறுநாள் நடுப்பகல் நேரத்தில் சோணையாற்றின் கரை அடைந்துள்ள அங்குள்ள சோலைகளில் இவர்கள் விளையாடியதைப் **பூக்கொய்த** படலத்திலும், இவர்கள் அங்குள்ள தடாகங்களில் விளையாடிய வைபவத்தை **நீர் விளையாட்டுப் படலத்திலும்**, பின்னர் மாலைகாலத்தில் எல்லோரும் மனம் போனபடி உண்டு களித்ததை **உண்டாட்டுப்** படலத்திலும், மறுநாள் பிற்பகல் மிதிலாநகரை அணுகி வருங்கால் ஜனகர், விச்வாமித்திரர் ராமலக்ஷ்மணர் ஸேனை பரிவாரங்களுடன் இவர்களை எதிர்கொண்டு வந்ததை **எதிர்கோட்** படலத்திலும், பின்னர் ஸ்ரீராமபிரான் மாப்பிள்ளைக் கோலமாக மிதிலாநகரத்தில் ஊர்வலம் வந்த வைபவங்களையும், அவரைத் தரிசித்துக் கிருஷ்ணனைக் கண்ட கோபிகைகள் போல மிதிலா நகரத்தவர் ஆனந்த பரவசரான சிறப்பையும் **உலாவியற்படலத்திலும்**, பின்னர் இரவில் கல்யாண விஷயமாக நடந்த நிச்சயதார்த்தத்தில் ஸ்ரீராமர் ஸீதாஸமேதராய் விளங்கியதை **கோலங்காண்** படலத்திலும், ஸீதாவிவாஹத்தைக் **கடிமணப் படலத்திலும்** வெகுவாக விஸ்தரித்திருக்கிறார். காவ்ய லக்ஷணத்திற்கேற்ப மிக சாந்தமான வைதிக விவாஹமாகிய ஸீதா கல்யாணத்தைக் கம்பர் இவ்வாறு விரிவாக வர்ணித்து, ஸீதா ராமர்களை [illegible] தலைவியும் தலைவனுமாக வைத்துச் சிருங்கார [illegible] அழகாக அமைத்துக்காட்டியிருக்கிறார். [illegible]

லக்ஷ்மணர், சத்துருக்கனர் இவர்களுக்கு அடுத்த நாள் கல்யாண மாவதாக இங்குக் காட்டப்பட்டிருக்கிறது.

அயோத்யாகாண்டம் 2

1. **குஹன்.**—இங்குக் குகனே ஓடம்விட்டு ஸ்ரீராமர் முதலியோரைக் கங்கைக்கு அக்கரைகொண்டு சேர்த்தான் என்று கூறப்பட்டிருக்கிறது.

2. இங்கு சத்ருக்னர் தம் முன் சர்வாபரண பூஷிதையாக வந்த கூனியைப் புரட்டி உதைத்தது காணப்படவில்லை.

3. **பரதர் அயோத்திக்குத் திரும்பியது.**—பரதர் யுக்தி பூர்வமாக ஸ்ரீராமரைத் திரும்பிவந்து ராஜ்யத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டதை ஸ்ரீராமர் தடுக்கமுடியாமல் போன ஸமயத்தில் தேவர்கள் அசரீரிகளாகத் தம் காரிய நிமித்தம் மிகுந்த ஆவலுடன் 'ராமர் 14 வருஷம் காட்டில்தான் இருக்கவேண்டும். நீ நாட்டில் அதுவரையில் அவர் ராஜ்யத்தைப் பாதுகாத்துப் பின்னர் கொடுக்கவேண்டும்' என்று கூறிவிட பரதர் ஸ்ரீராமர் வாக்கியத்திற்கு உட்பட்டு திரும்ப யத்தனித்தார். இங்கு ஜாபாலி நாஸ்திக வாதம் இல்லை.

ஆரண்யகாண்டம் 3

1. அயோத்தியாகாண்டத்திலுள்ள அத்திரியாச்ரமவாஸம் இங்கு ஆரண்ய காண்டத்தில் காணப்படுகிறது. ஸீதை தனது கல்யாண வைபவத்தை அனஸூயைக்குக் கூறுவதை இங்குக் காட்டவில்லை.

2. **சரபங்கர் மோக்ஷ** கதையில் அவரை மேலான லோகங்களுக்கு அழைத்துப்போக வந்த இந்திரன், அவர் அதற்கு இசைவாகத் தோற்றுதலினால் வெளிவந்து விட்டான். வருகையில் வாயிலில் ஸ்ரீராமபிரானைக் கண்டு வெகுவாகத் துதித்ததாகக்கொண்டு கம்பர் இங்குத் திவ்ய ஸ்தோத்திரம் ஒன்று செய்திருக்கிறார்.

3. **மாரீசனும் ராவணனும்**—ராவணன் மாரீசனை ஒரு முறை [illegible] அப்பொழுதே ஏற்பாடுகள் செய்துகொண்டதாக [illegible]காணப்படுகிறது.

4. **சீதாபஹரணம்.**—ராவணன் ஸீதையைத் தூக்கிப்போ

ருன்னால் பர்ணசாலையோடு பூமியைப் பெயர்த்துக்கொண்டு எடுத்துச் சென்றான் என்று கூறப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் பிரஹ்மா சாபம் ஞாபகம் வர ஸீதையைத் தொட அவன் அஞ்சினான் என்று சொல்லியிருக்கிறது.

கிஷ்கிந்தா காண்டம் 4

1. ராமலக்ஷ்மணரோடு ஹநுமார் ஸம்பாஷித்து அவரது கல்யாண குணங்களில் ஈடுபட்டுத் தமது ஸ்வரூபத்தைக் காட்டிப் பின் தமது விசுவரூபத்தையும் காட்டினதாக இங்குக் கூறப்பட்டுள்ளது.

2 ஆபரணங்களைக் காணுதல், ஸப்தஸாலங்களை எய்தல், துந்துபி எலும்பை எடுத்தெறிதல் ஆகிய இவைகள் சற்று முன் பின்னாக இங்குக் காணப்படுகின்றது.

3. வாலிக்கும் ஸுக்ரீவனுக்கும் ஒரு முறைதான் சண்டை நடந்ததென்றும், இதற்குப் புறப்படுமுன் வாலியைத் தாரை போகலாகாது என்று தடுத்தாள் என்றும் அப்பொழுதே தான் சண்டைக்கிடையில் ராமர் மறைந்து நின்று பாணம் போட்டார் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. இங்கு ஏற்படும் ஸம்பாஷணையில் லக்ஷ்மணரும் கலப்பதாகக் காண்கிறது

குறிப்பு —ஸ்ரீராமவாலி ஸம்வாதத்தை வால்மீகி ராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும் உள்ளபடி ஒழுங்குபடுத்தி சேர்த்து ஸம்பாஷணை ரூபமாக அநுபந்தம் 3 இல் இங்கு வரையப்பட்டிருக்கிறது.

4. இங்கு ஸுக்ரீவ பட்டாபிஷேகம் கிஷ்கிந்தையில் லக்ஷ்மணரால் நடத்தப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

5. தாரை ஸுக்ரீவனைப் பதியாக அடையாது பிரஹ்மசாரத்தை அநுஷ்டித்து விதவையாகவே இருந்தாள் என்று தெரியவருகிறது.

6. ஹநுமார் நளன் நீலன் ஜாம்பவான், முதலியோர் ஸ்வயம்பிரபை பிலத்தைவிட்டு வெளியேறியதும் ஒரு பொய் [illegible]யில் படுத்திருக்க அதன் நாயகனை தும்[illegible] புஷ்கலன் என்ற பெயரை உடைய ஒரு அஸுரன் அங்[illegible] தான் அவனால் அடி பட்டு இறந்தான். பின்னர் அ[illegible] தேசத்தில் மாறுவேஷம்கொண்டு தேடிவிட்டு இவர்கள் முதலில்

தெற்கு ஸமுத்திரக் கரையில் மஹேந்திரபர்வத அடிவாரம் வந்தார்கள்.

7. இங்குவந்ததும் அங்கதன் ஸீதையைக்காணாது காலம் அதிகமாகி விட்டதை எண்ணி வெரு துக்கப்பட்டு இறக்கத் துணிய ஜாம்பவான் தடுத்து நிறுத்தினார். ஸீதையைத் தேடிக் கண்டு பின் ராமகாரியத்தில் ஜடாயுவைப்போலச் சண்டையிட்டு இறப்பதே மேன்மை என்று ஹனுமார் கூற இதைக் கேட்டிருந்த ஜடாயு தமயனை ஸம்பாதி மலைக்குகையிலிருந்து வெளிவந்து ராமகார்யத்தில் தன் தம்பி உயிர்விட்ட வைபவத்தைக்கேட்டு ஆனந்தித்து வானரர்களை ஸ்ரீராமநாம ஸங்கீர்த்தனம் செய்யச் சொன்னான். இதைக் கேட்கக் கேட்க ஸம்பாதிக்கு இறகு முளைக்க அவன் தன் விருத்தாந்தத்தைக் கூறி ராவணன் ஸீதையை எடுத்துப்போவதைத் தான் கண்டதாகவும் அவள் இப்பொழுது லங்கையில் இருப்பதாகவும் அங்கு யாராவது ஒருவர் ரஹஸ்யமாகப் போய்வரவேணடும் என்பதாகவும் அப்படி முடியாவிடில் ஸ்ரீராமரிடம் தான் கூறியவைகளைக் கூறி அவரை ஸேனைகளோடு அழைத்துவந்து லங்கையுட் புகவேண்டும் என்றும் கூறிப் பறந்துபோனான்.

ஸுந்தர காண்டம் 5

1. ஆங்காரதாரை (ஸிம்மிகை) என்ற, நிழலைப் பிடித்திழுத்துத் தின்னும் குணமுடைய ராக்ஷஸியின் வயிற்றில் புகுந்து ஹனுமார் தமது உருவத்தைப் பெரிதாக்கிக் குடலைக் கிழித்துக் கொண்டு நூலோடு கூடிய காற்றாடி ஆகாயத்தில் பறப்பது போல உயரக்கிளம்பினார்.

2. ஹனுமார் ஊர்தேடி வருகையில் விபீஷணர் வீடு சென்று அவரிடம் உறங்குங்காலிருந்த தேஜஸ் வீட்டின் ஒழுங்கு முதலியவைகளைக் கண்டு வியந்து அவர் சிறப்பில் ஈடுபட்டார்.

3. திரிஜடையின் ஸ்வப்னம் ராவணன் வந்து ஸீதையை வருத்தும் முன் இங்குக் காணப்படுகிறது.

4. ஸீதை தற்கொலை புரியத் தயாராவதைக் கண்டு ஒளிந்திருந்த மரக்கிளையிலிருந்து 'அண்டர் நாயகன் (ராமர்) அருள் தூதன் யான்' என்று கூறிக்கொண்டு ஸீதைக்கு முன் ஹனுமார் முதலில் தோன்றினார். பின்னர் ராம கதை கூறினார்.

5. ஸீதை ஹநுமானோடு ராமரிடம் போகாததற்கு மிகுந்த விசித்திரமான காரணங்களும் இங்குக் காட்டப்பட்டிருக்கின்றன.

6. ஹநுமார் ஸ்ரீராமரிடம் திரும்பிவந்த உடனே தெற்கு நோக்கித் திரும்பி தண்டனிட்டுப் பின்னர், திரும்பி ஸ்ரீராமருக்குத் தண்டனிட்டுப் பின்னர் தான் பேசத்தொடங்கினார்.

7. இங்கு ஹநுமானை ஸ்ரீராமர் ஆலிங்கனம் செய்து கொண்டதாகக் கூறப்படவில்லை.

8. யுத்த காண்டக் கதையின் பாகமாகிய தெற்குக் கடலைச் சேரும் கதை இங்கு ஸுந்தர காண்டத்துள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

யுத்தகாண்டம் 6

(1) ராவணன் மந்திராலோசனை ஸபையில் மந்திரிகள் எல்லாம் துர்போதனை செய்து அவனைக் கெடுத்துவருகையில் விபீஷணர் எழுந்து பலவாறாகப் புத்திமதி கூறினார். அதன் இடையில் ராவணன் முன் ஜன்மமாகிய ஹிரண்யன் ஜன்மத்தில் அவனைக் கொல்ல நரஸிம்ஹ வடிவாக வந்த ஹரியே இப்பொழுது ஸ்ரீராமராக வந்திருக்கின்றார் என்பது தொனிக்க இங்குப் பிரஹ்லாதச் சரித்திரம் விரிவாகக் கூறியிருப்பதாகக் காண்கிறது.

(2) ஹநுமார் லங்கையில் செய்த அற்புதச் செயல்களை விபீஷணர் ஸ்ரீராமருக்கு விஸ்தாரமாக எடுத்துரைக்கிறார்.

(3) சுகன் என்ற ராக்ஷஸன் கடல் கடந்த பின்பு ஒற்றனாக வருவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

(4) ராமசேனையை வடக்கு கோபுரவாயிலில் பார்த்துப் பயந்த இராவணன் மாயாராமர் தலையை ஸீதை முன்பு எறிந்து அவளை வசப்படுத்த எண்ணித் துக்கத்திற்கு ஆளாக்க, விபீஷணர் மனைவியான ஸரமை தேற்றிய கதை இங்குக் காணப்படவில்லை. இதற்குப் பதிலாகக் கும்பகர்ணன் வதத்திற்குப் பிறகு மாயா ஜனகர் தலைவெட்டி ஜானகியை வருத்திய கதை ஒன்று காணப்படுகிறது.

பின்னர் உள்ள அணிவகுப்பும், மகுடபங்கமும் இங்கு இடம் மாறிக் காணப்படுகின்றன.

5. ராவணன் முதல் நாள் யுத்த முடிவிலேயே ஹநுமா

சியம் முஷ்டியுத்தம் செய்து ராமர் முன்பு தோல்வி அடைந்து னின்றான். ஸீதையை விடுவதாக எண்ணித் தீர்மானம் செய்தால் அப்பொழுதே யுத்தத்தை நிறுத்தி விடுவதாகவும், எப்படியும் போய் மறுநாள் ஆலோசனை செய்து தேறி வரும்படியாகவும் அவர் கருணையுடன் உத்தரவு செய்ய ராவணன் வெட்கி வெறுங் கையோடு லங்கை புகுந்தான்.

6. ராவணனை அத்தருணத்தில் மாலியவான் வந்து கண்டு ஸீதையைக்கொண்டு விடுவது நலம் என்று புத்திமதிகூற நல்ல வழிக்கு ராவணன் திரும்பிவருகையில் துர்மந்திரிகள் உபதேசத்தால் கும்பகர்ணனை எழுப்பி மறுநாள் சண்டைக்குப் போகும்படி தூண்டினான். சண்டைக்கு வருகையில் கும்பகர்ணனுக்கும் விபீஷணனுக்கும் நடந்த ஸம்பாஷணை ஒன்று கூறப்பட்டுள்ளது. (3-ம் அநுபந்தத்தைப்பார்க்க)

7. முதல்நாள் மாலையில் தோல்வி அடைந்த இந்திரஜித்து விட்ட நாகபாசம், இங்குக கும்பகர்ணன் வதைக்குப் பின் அதிகாயன் வதை முடிந்த உடன் அவனால் பிரயோகிக்கப்பட்டதாகக் கூறியிருக்கிறது

8. இந்திரஜித்து பிரஹ்மாஸ்திரம் விட்டு லக்ஷ்மணரை மாத்திரம் வீழ்த்தியதாகவும் இராமா இதைக்கண்டு மூர்ச்சித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

9 இந்த ஸமயத்தில் ஸீதையை புஷ்பக விமானத்தில் சில ராக்ஷஸிகள் ஏற்றி ராவணன் உத்திரவின்பேரில் யுத்தகளத்தைக் காட்டிவர அவள் மிகவும் துக்கித்ததாகக் காணப்படுகிறது.

10. ஸ்ரீராமர் குறித்தகாலத்தில் வரச் சற்று தாமதித்ததைக் கண்டு பரதன் எரிமூட்டி அதனுள் பிரவேசிக்கத் தயாராகவிருக்குங்கால் ராமர் வரவைத் தெரிவிக்க விரைவாக வந்த ஹநுமானால் தடுக்கப்பட்டு ஸந்தோஷித்தான் என்று கூறப்பட்டுளளது.

அனுபந்தம் 3

சில ஸம்பாஷணைகள்

1. ஸ்ரீராம வாலி ஸம்வாதம்

தன் தம்பியாகிய ஸுக்ரீவனால் இரண்டாம் முறை சண்டைக்கழைக்கப்பட்ட வாலி, தன் பெண்சாதி எவ்வளவு தடுத்தும், "இருவர் சண்டையிடுங்கால் அகாரணமாகத் திடீரென்று என்னைக் கொல்லும்படியான அவ்வளவு துராத்மாவா ராமர்?" என்று ஸமாதானம் கூறி அவளை மீறிக்கொண்டு சண்டைக்குவந்தான். அப்பொழுது நடந்த சண்டையில் ஸுக்ரீவன் மிகச் சோர்ந்து இன்னசெய்வது என்று தோன்றாது திகைத்து நிற்கும் தருணத்தில் செடி மறைவிலிருந்த ஸ்ரீராமர் ஒருபாணத்தை வாலி மார்பை நோக்கி எய்ய, அது லக்ஷ்யம் தவறாது பாய்ந்து வாலியை வீழ்த்தியது. மிகுந்த கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கையில் தனது அருகில் வந்த ராமரை நோக்கி வாலி கேட்கத்தொடங்குகிறான்:—

வாலி.—நீர் நல்ல குலத்திற் பிறந்தவராச்சுதே! என்னைக் காரணமின்றி இப்பொழுது ஏன் வதைசெய்து இந்த அதர்மத்திற்கு ஆளானீர்? நீரே அதர்மம் செய்துவிட்டால் உலகத்தவர் நிலை என்னவாகும்? என்னைக் கொல்ல உமக்கு என்ன அதிகாரம்?

ஸ்ரீராமர்.—உன்னை நான் அகாரணமாகக் கொல்லவில்லை. உன் கொடிய குணங்களை ஸுக்ரீவன் மூலமாகக் கேள்விப்பட்டு உன்னைக்கொல்வேன் என்று அவனுக்கு அபயப்பிரதானம் செய்திருந்தேன். அவ்வாறே செய்தேனே ஒழிய வேறில்லை. மேலும் இந்த பிரதேசங்களை ஆளும் ராஜா பரதனது ஆள்கள் நாங்கள். அதர்மத்தை அடக்கவேண்டியது எங்கள் பொறுப்பு.

வாலி:—இரண்டு பேர்கள் விரோதிகளிருந்தால் ஒருவன் சொல்வதையே கேட்டுக்கொண்டு, மற்றவன் கூறுவதைக் கேட்காது, அவனுக்கு அவஸரமாகத் தண்டனை விதிப்பது மனுநீதிக்குத் தவறாகாதா? உம்போன்றவர் இவ்வாறு செய்யலாமா?

ஸ்ரீராமர்.—நான் உன்னைக் 'கேட்காவிட்டாலும்' அவன் உன்னைப்பற்றிக் கூறிய கொடிய விஷயங்களுக்கு ஹனுமார் முத

ழிய தர்மாத்துமாக்கள் அப்பொழுது ஸாக்ஷியாக இருந்து ஸுக்ரீவன் கூறிய விஷயங்கள் ஒன்றையும் ஆக்ஷேபிக்கவில்லை. இப்பொழுது தான் உன்னைக் கேட்கிறேன். நீ உன் குற்றத்தை மறுத்துவிடேன் பார்ப்போம்! நீ உன் தம்பியின் பெண்சாதியாகிய ருமையை அபஹரித்து அவனுக்குப் பெருங்கேட்டை விளைக்கவில்லையா?"

வாலி.—ஆம். அவன் என் ராஜ்யத்தை நானில்லாத ஸமயத்தில் கைப்பற்றிக்கொண்டு என் பெண்சாதி தாரை முதலியவர்களைத் தன் வசப்படுத்திக்கொள்ளவில்லையா? அதனால் எனக்கு ஆத்திரம் அதிகமாகிவிட்டது. நானும் அவ்வாறே செய்தேன்.

ஸ்ரீராமர்—ஸுக்ரீவனிடம் நீ எடுத்துக் காட்டிய குற்றம் உண்மையே. குற்றம்பார்க்கில்சுற்றமில்லை. அவன்குணாகுணங்களை நீ கவனிக்காமல் ஏன் கொடிய செயல்களை அவன் விஷயத்தில் செய்தாய்? அவன்காவலாக இருந்த குஹையின் வாயில் ஒரு வருஷம் முடிந்ததும் இரத்தம் பெருக உன் ஏற்பாட்டின்படி நீ மாண்டதாக மதித்து ஸுக்ரீவனும் மரிக்க யத்தனித்தான். அப்பொழுது பெரியோர்களது வேண்டுகோளால் அவன் ராஜ்யத்தை ஒப்புக்கொண்டானே ஒழிய ராஜ்யத்தைக் கைப்பற்றி உன்னைப் பறக்கவிடவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தால் அவ்வாறு செய்யவில்லை. நீ வந்ததும் அவன் உன்னிடம் ராஜ்யத்தைக் கொடுத்து மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவில்லையா? அப்படி இருக்க நீ அவனை இவ்வாறு வருத்தலாமா? நீ வரக்கூடாத ரிச்யமூக பர்வதம் போனதனால் அல்லவா நான் வரும் வரையிலாவது ஸுக்ரீவன் உயிர் தரித்திருந்தான்

வாலி.—நீர் கூறுவது நியாயமே. என் பெண்சாதி முதலிய எல்லாவற்றையும் முன்னர் அபஹரித்துக்கொண்டு விட்டதால் என் கோபம் அடக்க முடியாமல் போய்விட்டது. நானும் அவன் செய்ததற்குப் பிரதிசெய்தேன்.

ஸ்ரீராமர்.—ஒருவர் செய்த கெடுதிக்குப் பதிலாகக் கெடுதி செய்வது உன்போன்ற புத்திசாலிகளுக்கு அழகன்று. மேலும் குரங்குகள் தர்மப்படி ஸஹோதரர்கள் பெண்சாதிகளை அவர்கள் இறந்த பின்னர் மற்றைய ஸஹோதரர்களில் ஒருவன் பெண்சாதியாக்கிக்கொள்கள்ளலா. இதன்படி நீ இறந்ததாக எல்லோரும் மதிக்க ஸுக்ரீவன் அதை நம்பியல்லவோ உன் பெண்சாதியை அங்கீகரித்தான். அப்படி இருக்க அவன் உயிரோடிருப்பதைத் தெரிந்துகொண்டு நீ அவன்பெண்சாதியை அபஹரித்தது மஹாபாபம் அல்லவா?

வாலி.—பெண்சாதி விஷயத்தைப்பற்றி இவ்வளவு நீர் பேசுவானேன்? மனிதர்களுக்குள் கல்யாணம் முதலிய வரம்புகள் இருக்கின்றன; இந்த வரம்புகள் தவறினால் உங்களுக்கு மிகுந்த துக்கங்கள் ஏற்படலாம். எங்களுக்கோ அப்படியல்ல. நாங்கள் கேவலம் குரங்குகள் எங்கள் ஸ்திரீ புருஷ விஷயங்களை நீங்கள் உங்களுக்கு ஏற்பட்ட நீதிப்படி தர்மாதர்மம் என்று மதிக்கலாகாது. ஆதலால் என்பேரில் இதை ஒரு பெரிய குற்றமாகச் சுமத்த நியாயம் இல்லை.

ஸ்ரீராமர்.—நீயா கேவலம் குரங்கு! குரங்கு இவ்வளவு நியாயம் பேசுமா? முதலையின் வாயில் அகப்பட்டு ஆதிமூலமே என்று கதறிய களிறு கேவலம் மிருகமாகுமா? என் தேவிக்காக ராவணனைத் தடுத்துப் போர்செய்து உயிரைவிட்ட எங்கள் தந்தையாகிய ஜடாயு என்ற கழுகு கேவலம் பக்ஷியா? பகுத்தறிவுடையது எந்த ஜந்துவாகிலும் தேவதைகளுக்கு ஸமமே. மேலும் நீ சிவபக்தனல்லவா? இப்படியிருக்க நீ குரங்கு என்று கூறித் தப்புவித்துக்கொள்ளவா பார்க்கிறாய்? நீ குரங்கென்று சொல்லுவாயாகில் காட்டில் மிருகங்களை வேட்டையாடுவதுபோல் உன்னை வேறொருவனோடு போர்செய்து கொண்டிருந்த காலத்தில் மறைந்து அடித்தால் என்ன அதர்மம் வந்துவிட்டது? மேலும் உங்களுள் ஸ்திரீ தர்மம் இல்லை என்றால் ஸுக்ரீவன் செய்ததில் அவ்வளவு கோபம் உனக்கு வருவானேன்?

வாலி.—நீர் சொல்வதுபோலக் கொண்டாலும் தர்மாத்மாவான வேடர்கள் தமக்கு ஆஹாரம் முதலியவைகளுக்கு உபயோகமாகும் ஜந்துக்களையே கொல்வார்கள். குரங்குகளின் மாம்ஸம் எந்தப் பிராணிக்கும் ஆஹாரமாகாதே! எங்கள் தோல் முதலியன ஒன்றிற்கும் உபயோகப்படமாட்டாவே! அப்படியிருக்க என்னை ஏன் இப்பொழுது கொன்றீர்? நீர் ஸுக்ரீவனுடன் ஸ்நேகம் செய்துகொண்ட பிறகு நான் அவனுக்கு ஏதாவது அபராதம் செய்திருந்தால் நீர் என்னைக் கொல்லலாம். அப்படி ஒன்றும் இல்லையே. தாரை சொல்லியபடி கேளாது அநியாயமாய் உயிரிழக்க போகிறேன்! விதி யாரை விட்டது?

ஸ்ரீராமர்:—ஸுக்ரீவன் முதல்தரம் 'சண்டைக்கு வந்தான். அவனைத் தோற்க அடித்துத் துரத்திவிட்டாய். இரண்டாம் தரம் வருங்கால் தாரை எவ்வளவு சொல்லியும் கேளாது சண்டைக்கு வந்ததே உனக்குப் போதாதா? முதல் தரம் ஸுக்ரீவனுக்குச் செய்த தீங்கே உன்னைக் கொல்வதற்குத் தகுந்த குற்றமல்லவா?

வாலி:—சிங்கமிருக்க யாராவது முயலை, ஸ்நேகஞ் செய்து கொள்ளுவார்களா? என்னுடன் ஸ்நேஹம் பாராட்டி உமது விஷயத்தைக் கூறியிருப்பீராயின் என் வாலை விட்டு ராவணனை இங்கு இழுத்துவந்து உமது ஸீதையைக் கொண்டுவந்துவிடும்படி செய்ய மாட்டேனா? அநியாயமாய் என் தம்பியுடன் ஸ்நேஹம் செய்து என்னைக் கொன்றீரே!

ஸ்ரீராமர்.—நான் காட்டில் வருங்கால் ஸுக்ரீவனை முதலில் கண்டேன். அவன் விஷயங்களைக் கேட்டதும் அவன் தர்மாத்மாவென்றும் நீ கொடியவனென்றும் தெரியவந்தது. அவனோடு ஸ்நேகஞ் செய்துகொண்டு உன்னைக் கொல்லும்படி நேரிட்டது. ராவணன் செய்த குற்றத்தைச் செய்த உன்னுடன் ஸ்நேஹஞ் செய்துகொண்டு ஸீதையை எளிதில் அடைவதைவிட தர்மாத்மாவான ஸுக்ரீவனுடன் அன்பு பாராட்டி கஷ்டப்பட்டு ஸீதையை அடைவதுமேல்.

வாலி.—எல்லா விஷயங்களிலும் எனக்குத் திருப்தி வந்துவிட்டது. நான் கேவலம் குரங்கல்ல. நான் என் தம்பி விஷயத்தில் செய்தவையெல்லாம் அதர்மமே. நான் உமது ஸ்நேகத்திற்குத் தகுந்தவனல்ல. ஆயினும் உம்மால் ஸ்நேகிக்கக் கருதப்பட்ட நான் இன்னொருவனோடு கருத்தின்றி சண்டை செய்துகொண்டிருந்த காலத்தில் மறைந்திருந்து என்னைத் திருடனென்று ஒரே பாணத்தால் அடித்துச் சாய்ப்பது என்ன யுத்த தர்மம்? இதுதான் உம்மிடத்தில் எனக்கு அடங்காத கோபத்தை உண்டாக்குகிறது. சூரிய குலத்தில் பிறந்து மாறா அபகீர்த்தியைப் பெறும்படி உமக்கு நேரிட்டதே என்ற துக்கம் என் மனதில் ஒரு பக்கம் கிளம்புகிறது. இந்த விஷயத்தில் அதர்மத்தில் முயன்றவரல்லவா நீர்?

லக்ஷ்மணர்.—அப்பா! நீ இந்தப் பாகத்தை எண்ணி மனங் கலையாதே. உன் பாபம் உன் தம்பியின் கஷ்டம் இவைகளைக் கருதி என் தமையனார் உன்னைக் கொல்வதாக ஸுக்ரீவனுக்கு வாக்களித்துவிட்டார். மேலும் ராவணன் உன்னுடன் ஸ்நேஹம் செய்துகொண்டிருக்கிறான். ஆகவே இந்த விஷயத்தில் உன்னைக் கொல்லவேண்டியது அவசியமே. என் அண்ணா உன் எதிரில் வந்து தனுஷ்டங்காரம் செய்திருப்பாராயின் தாரையின் புத்திமதிகள் ஞாபகம்வர நீ அவரைச் சரணம் அடைந்திருப்பாய். உன்னைக் கொல்லாதிருக்க வேண்டிவரும். அதனால் தமையனார்க்குத் தவறும், விரோதியின் தோழனைக் காக்கவேண்டிவரும்,

கொடியவனுக்கு இடங்கொடுத்ததாகும். ஆகையால்தான் அவர் இவ்வாறு செய்யும்படி நேர்ந்தது

ஸ்ரீ ராமர்:—ராஜதர்மத்தில் சில பாகங்கள் பிறருக்குக் கஷ்டத்தை உண்டாக்க ஏற்பட்டவைகள்தான். ஆனால் ரண வைத்தியன் கட்டியால் வருந்துபவரைக கருவியிட்டு ஹிம்ஸித்தாலும் முடிவில் அவன் செய்வது ரோகிக்கு ஸௌக்கியத்தையும் பலத்தையும் கொடுக்கும். அதுபோல ராஜாக்கள் தாம் நடந்துகொள்ளும் மாதிரியால் கஷ்டத்தை உண்டாக்கி முடிவில் பிரஜைகளுக்கு நற்கதி கொடுக்கிறார்கள். ராஜாக்கள் அநேக தேவர்களுடைய அம்சங்களைத் தம்முள் அடக்கியிருப்பதால் அவர்கள் மனுஷ்ய சரீரமுடைய தேவதைகளைப் போல உலகில் உலாவி வருகிறார்கள். அவர்களை வருத்துவதும் அவர்கள் கெடுதலைச் செய்கிறார்கள் என்று மதிப்பதும், நிந்திப்பதும், தடுத்துப் பேசுவதும், அவர்களிடம் அதிருப்தியான வார்த்தைகளைச் சொல்வதும் சரியல்ல. நீயோ ராஜதர்ம ஸூக்ஷ்மம் அறியாமல் பிதற்றுகிறாய். இந்த விஷயத்தில் உண்டாகும் கோபம் வீணே! இது பயனற்றதும். அல்லாமல் நீ செல்லும் வழிக்குந் தடையாகவும் ஏற்படும். ஆதலால் இதைப்பற்றி நினையாது ஒழிந்து ஸுகம் பெறு.

வாலி.—என் மனம் திருப்தி அடைந்தது. வேறு வழி யாதொன்றும் இல்லாததால் அல்லவா நீர் இவ்வாறு செய்யும்படி நேரிட்டது! இப்படிச் செய்தும் மறைந்து ஓடிவிடாது, என் முன்னே வந்து நின்று தர்மஸூக்ஷ்மம் அறியாது நான் சுமத்திய பழியை வெகு தைரியமாயும் சாந்தமாயும் ஏற்றுக்கொண்டீரே! தம் மேல் கொஞ்சம் பழிவந்தாலும் வரட்டும், நடத்தவேண்டியகாரியத்தைக் கூடியவரையில் தர்மவழியில் நடத்தி சரணாகதனை எப்படியாவது ரக்ஷிக்கவேண்டும் என்ற கருணைகூர்ந்த கிருபாநிதியே! இந்த ரஹஸ்யம் உணராது கோபாவேசத்தால் உம்மை வாயில் வந்தபடி எல்லாம் திட்டிவிட்டேன். இவ்வளவையும் பொறுத்துக்கொண்டு உமது ஸம்பாஷணை மூலமாக என் கொடிய நிலையை நிரூபித்து நான் செய்த பாபத்தை எண்ணித் துக்கித்துப் புனிதனாகும்படியாகவும், என் மனதில் முழுதில் எழுந்த வீண் கோபத்தையும் ஆபத்தர்ம ரஹஸ்யத்தை உபதேசித்து அடக்கி சாந்தனாகும்படியாகவும், உமது சிறப்பில் ஈடுபட்டுப் பிழைக்கும்படியாகவும் செய்தீர்! நீர் நினைத்திருந்தால் என்னை ஒரே பாணத்தால் உயிரற்று விழும்படி செய்திருப்பீர்! அவ்வாறு செய்யாது என்னைக் கீழே விழும்படி செய்து என்னுடன் வாதாடி என்

மனதை சேர்மைப்படுத்திய கருணையங்கடலே! ஸுக்ரீவனைவிட என்னிடத்தில்தான் உமக்கு அதிகப்பிரீதி. நீர் என்னைக் குற்றுயிராய் இங்குத் தள்ளியதே இந்த பிரீதியைக் காட்டுகின்றது. என்னைப்போன்ற கொடியவனை ஆட்கொள்ளும் விதம் இதுவே. இப்படி இல்லாவிடில் நான் எவ்வளவு ஜன்மம் எடுத்துப் படாத பாடெல்லாம் பட்டு என் பாபங்களைத் தீர்த்துக்கொண்டு இந்நிலையை யடையவேண்டும். இப்பொழுது எனக்கு வந்திருக்கும் சாந்தம் என்போன்ற கொடியவர்களுக்கு உமது கருணையின்றி இவ்வளவு எளிதில் வருமா? நீர் என்னை உடனே கொல்லாது என் வாயைப்பிடுங்கி மனதைக் குவித்து அனேக ஜன்ம காரியத்தைக் கொஞ்ச நாழிகையில் நடத்திவிட்டீரே! ஸர்வ வல்லமையுள்ள நீர் நினைத்தால் எதுதான் செய்யமுடியாது? நீர் என் விஷயத்தில் செய்த தொழில் எல்லாவற்றையும், இப்பொழுது பார்த்தால்தான் எனக்கு மிகுந்த திருப்தி உண்டாகிறது. இனி நான் மிகுந்த சாந்தமாக மரணத்தை எதிர்கொண்டழைப்பேன். ஸுக்ரீவன் அங்கதன் உள்பட எல்லோரும் உமக்கு அடைக்கலம். அவர்கள் என்னைப்போலக் கொடியவர்கள் அல்லர். ஆகையால் எந்தக் கஷ்ட ஸமயத்திலும் என்னை ஆட்கொண்டபடி அவர்களை ஆட்கொள்ள வேண்டுமென்று உமது திருவுள்ளத்தில் உதிக்க இடமே இராது. உம்மிடத்தில் என் கர்மங்கள் எல்லாவற்றையும் அர்ப்பித்துவிட்டேன். எல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு என்னை விடுவியும் விரிஞ்சி நாராயண சங்கர ஸ்வரூபா! ஹே ராமா ராமா ராமா!' என்று கூறி வாலி மிகுந்த சாந்தமாகத் தேகம் நீக்கினான்

2. ராவண கும்பகர்ண ஸம்வாதம்.

ராவணன் ஸீதையை லங்கைக்குக் கொண்டுவந்து அசோகவனத்துள் வைத்து அநேகவிதமாக நயவழியாலும், பயவழியாலும், பலவிதமான மாறுவேஷங்கள் தரிப்பதாலும் அவளை வசப்படுத்த முயன்றான். எல்லாம் முடிவில் பயன்படாதது கண்டு திகைத்து நிற்கையில் அவனுக்குத் தன் தம்பி கும்பகர்ணன் ஞாபகம் வந்தது. உடனே அவனை எழுப்பியாவது ஸீதையைப் பயமுறுத்தி அவளைத் தன்வசப்படுத்திவிடலாம் என்று அவனுக்குத் தோன்றியது. தன் தம்பி இடம் சென்று அவனை எழுப்பி அவன் தீர்க்க நித்திரைக்காரனாதலால் அவனிடம் சுருக்கமாக விஷயங்களைச் சொல்லத் தொடங்கினான்.

ராவணன்.—ஸீதை என்றோர் அழகிய ஸ்திரீ இருக்கிறாள்.

கும்பகர்ணன்.—அவளை என்ன செய்துவிட்டாய்?

ரா.—அவளைத் தூக்கிவந்து அசோகவனத்தில் வைத்தாய் விட்டது.

கு.—அப்படியானால் அவளை வசப்படுத்திக்கொள்ளேன்.

ரா.—என்ன முயன்றும், எவ்விதம் ரூபங்கள் தரித்தும் அவளை வசம் பண்ண முடியவில்லை. ஆதலால்தான் உன் ஸஹாயத்தைத் தேடிவந்தேன்.

கு.—நீ முயற்சிசெய்த காலங்களில் எல்லாம் ஸீதை எவ்வாறு நடந்துகொண்டாள்?

ரா.—நான் எந்த உருவம் தரித்து எவ்வளவு விநயமாகப் பேசியபோதிலும் அவள் என்னை ஓர் துரும்பாக எண்ணி 'என் நாதன் ஸ்ரீராமரைத் தவிர மற்றவரை ஓர் துரும்பாகக்கூட மதிக்கேன்! கண்ணெடுத்தும் பாரேன்!' என்று தலைகுனிந்துகொண்டு அச்சமின்றிக் கூறுகிறாள்.

கு.—ஆனால் ராமர் உருவமெடுத்து அவளை வசப்படுத்த முயன்றாயா?

ரா.—அப்படியும் செய்ய முயன்றேன். ராமர் உருவத்தை நான் தரித்ததும், எனக்கு ஸீதையிடம் இருந்த துர் ஆக்கிரஹம் எங்கேயோ மறைந்துபோய்விடுகிறது. அந்த உருவத்தைத் தரித்துக்கொண்டு ஸீதையிடம் போனால் காலைக்கு மேல் ஒன்றும் செய்ய ஓடவில்லை. நிரபராதியான ஓர் ஸ்திரீயை நாம் ஏன் வருத்தவேண்டும் என்று எனக்குத் தோற்றுகிறது. எனக்கு மேல் யோசனை தோன்றவில்லை.

கு.—நான் வந்து அதிகமாக அவளை எவ்விதத்திலும் பயமுறுத்தப்போகின்றேன். நீ இவ்வளவு முயன்றும் உன்னால் முடியாமற் போய்விட்டபடியால் ஸீதை மஹா பதிவிரதையாய் இருத்தல் வேண்டும். அவள் புருஷனாகிய ராமன் உருத்தரித்தால் உன் கெட்ட எண்ணங்கள் அக்கா[illegible]ல் மாறி உன் மனத்தில் நல்ல எண்ணங்கள் ஊறுவதால் அவ[illegible] சிறந்த மஹானாய் இருத்தல் வேண்டும். ஆதலால் ஸீதையை இங்குப் பலாத்காரமாக நீ வைத்திருப்பது உனக்குக் கெடுதியாகவே முடியும். இப்பொழுதே ராமரிடம் ஸீதையைக் கொண்டுபோய் விட்டுச் சரணடைந்துவிடு.

கும்பகர்ணன் வார்த்தை ராவணன் காதில் ஏறவே இல்லை. கும்பகர்ணனும் உறங்கத் தொடங்கினான்.

இந்த ஸம்பாஷணையிலிருந்து வேஷத்தின் திறம் வெளியாகிறது. கெட்டவழி எளிதாகையால் அதற்குத் தகுந்த வேஷத்தின் பலன் சீக்கிரத்தில் தெரியும், சற்று நீடித்தும் நிற்கும். நல்ல வழி மிகக் கஷ்டமாக இருப்பினும் அவ்வழிக்குரிய பெரியோரைப்போல வேஷம் போடுவதின் பலன் அந்த ஸமயத்தில் இராமல் போகாது. அது நீடித்து நிற்பதும் நிற்காததும் வேஷம்போடுபவனது நோக்கம் மனதின்றிலை இவைகளைப் பொருத்தது. ஆகவே நல்லோரைப் போல் ஒருவன் வெகுகாலம் மனப்பூர்வமாக நடித்து வந்தால் அவர்கள் எண்ணம் முடிவில் அவனிடம் குடிகொள்ளாமல் போகமாட்டாது.

3 கும்பகர்ண விபீஷண ஸம்வாதம்

கும்பகர்ணன் யுத்தத்திற்கு வருவதை ராமர் காண, அவருக்கு கும்பகர்ணன் ராவணனுக்கு ஸீதை விஷயமாகக் கூறிய நற்புத்தியை விபீஷணர், எடுத்துரைத்து 'என் தமயனாகிய இவன் நல்லவன், ஆனால் ராக்ஷஸ குணத்தால் ராவணனுக்கு ஸஹாயம் செய்கிறான்' என்றார். அதற்கு ராமர் 'ஆனால் நீ போய் அவனை அழைத்துவா, அவனுக்கும் அபயம் அளித்துக் காக்கிறேன்' என்று மிகுந்த கருணையுடன் கூறினார். உடனே விபீஷணர் கும்பகர்ணனிடம்போய் ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட பின்வரும் ஸம்பாஷணை நடந்தது.

கும்பகர்ணன்.—அப்பா, என் அருமைத்தம்பீ! நீ என் என்னிடம் வந்துவிட்டாய்? நீ ராமகிருபைக்குப் பாத்திரமாகி உனது ராக்ஷஸதர்மத்தை விட்டபோதிலும் சிறப்புற்றாய் என்று மிகுந்த ஸந்தோஷத்துடன் இருந்தேனே! நாங்கள் எல்லோரும் ராவணனுக்காக மாளும்படி தீர்ந்துவிட்டபோதிலும் நீயாவது எங்கள் பின்னிருந்து எங்களுக்கு ஈமக்கடன்களைச் செய்து எங்களுக்கு மேன்மை உண்டாகும்படி லங்கையை ஆளுவாய் என்றல்லவோ இருந்தேன்! உனக்கு ஏன் துர்புத்தி வந்தது? எங்கள் உறவு உன்னை மஹாத்மாவான ராமரிடமிருந்து இழுத்துவிட்டதா? என்ன, ராமரால் நாங்கள் எல்லோரும் இறப்பது திண்ணம்.

விபீஷணர்.—நான் ராமரை விட்டுவிட்டு ராக்ஷஸர் பக்கம் சேர வந்துவிடவில்லை. நீ அநேக ஸமயங்களில் ஸீதை விஷயமாக ராவணனுக்கு நற்புத்தி கூறிய விஷயங்களை ராமருக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவர் இப்பொழுது உன்னைக் காண

டனும் உன்னை யுத்தத்தில் கொல்ல மனம் எழாதவராய் நீ சரணம் புகுந்துவிட்டால் உன்னையும் என்னைப்போல ரக்ஷிப்பதாக வாக்களித்திருக்கிறார். நீ நல்லவனானதால் உன்னை மரணம் வாராது தடுத்து உனக்கே லங்கா ராஜ்யத்தைக் கொடுத்துவிடுவதாக நான் தீர்மானித்து விட்டேன். கொடிய ராவணனுக்காக வீணாக நீயும் இறப்பானேன். ராமர் உன் வரவை எதிர்பார்த்திருக்கிறார்; சீக்கிரம் என்னுடன் வா.

கும்ப.—இந்த வார்த்தையை மாத்திரம் என்னிடம் கூறாதே. ராவணன் எவ்வளவு கொடியவனாயினும், அவனைக் கீழிருப்பவராகிய நாம் திருத்த முயலவேண்டும் முடியாவிடில் அவனுக்கு முன்னரே யுத்தகளத்தில் அவனுக்காக நமது உயிரைக் கொடுக்கவேண்டுமே ஒழிய அவன் இறந்து யுத்தகளத்தில் விழுவதைப் பார்த்துக்கொண்டிருக்கலாமா? நான்போய் யுத்தம் செய்துவருவேன் என்றல்லவோ அவன் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பான். ஆதலால் நீ கூறுவதுபோலச் செய்யலாகாது மேலும் நமது தங்கை மூக்கை அறுத்து அவமதித்த மனிதர்களுக்கா நான் வணங்குவது, என்றால் முடியாது நீ போய்வா.

வீபீ.—நான் ஸ்ரீராமரிடம் போய்ச் சேரவில்லையா? அம்மாதிரி நீயும் வந்துவிட்டாலாகாதா? நல்வழிக்கு வருவதற்குக் காலங்கூடப் பார்க்க வேண்டுமா?

கும்ப.—அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்? நீ ஆதிமுதலே தர்மவழியில் நின்று வருபவன்; ராவணனுக்கு ஸத்புத்தியையே கூறிவந்தவன். முடிவில் உன்னை அவன் அவமதித்துத் தள்ளிவிட்டான் ஆகவே உனக்கு அவனிடம் ஒருவிதமான பற்றுமில்லை, உன்னிடமிருந்து அவன் ஒருவித ஸஹாயத்தையும் எதிர்பார்க்கவில்லை நீ பிறவி மாத்திரத்தில் ராக்ஷஸனே ஒழிய, உண்மையில் எங்கள் குலத்தை மேன்மைப்படுத்த வந்த தேவதையே. நீ கருணாநிதியான ராமரிடம் யுத்தம் தொடங்குவதன்முன் போய்ச் சேர்ந்தது நியாயமே. என்னிலை அப்படியா இருக்கிறது? மனிதனுக்கு வணங்காக் குணம், தங்கையை அவமதித்தவர் ராமலக்ஷ்மணாள் என்ற வெறுப்பு, ராவணன் என்னிடமிருந்து மிகுந்த உதவியை எதிர்பார்க்கிறான் என்ற எண்ணம், இப்பொழுது ராமனை எதிர்த்து யுத்தம் செய்ய புறப்பட்டுவிட்ட காரியம், ஆகிய இவைகள், நான் ராமர் விஷயத்தில் எவ்வளவு நல்லவனாயினும், என்னை அவர் பக்கம் சேரவொட்டாது தடுக்கவில்லையா? நான் எப்படி வருவது!

விபீ.—அண்ணா நல்லவனாகிய நீ இவ்வாறு காலநிலைமைகளுக்குள்பட்டு இறக்கும்படி நேருகிறதே! இதுதான் எனக்கு மிகுந்த துக்கம்! உனக்கு வேறு கதியில்லையா ?

கும்ப.—அப்பா தம்பீ! உன் மேன்மை எனக்கு எப்படி வரும்? ஆதிமுதல் எனக்கு ராக்ஷஸகுணம் அதிகம். எனக்கு ராமரிடம் வைரத்திற்குக்காரணங்களும் இருக்கின்றன. இப்படி இருக்க நான் ராமலக்ஷ்மணரைத் தவிர மற்றையவர்களைப் படாத பாடுபடுத்திவிடுவேன். ராவணனிடம் சேர்ந்திருப்பதால் நான் இறக்கவேண்டியதே. என்னைப்போல, கொடியவர் பக்கத்தில் இருக்க நேர்ந்தவருக்கு வேறுகதி ஏது! ஸ்ரீராமரைப்போன்ற மஹாத்மாவால் இறந்து இருந்தவேண்டியதுதான்.

விபீ.—நான் என்னென்னவோ எண்ணிக்கொண்டல்லவோ வந்தேன் ? இப்படியா முடிந்தது ?

கும்ப.—தம்பீ! என் மனதை வீணாக வருத்தி கலைக்க முயலாதே! இங்கிருந்தால் உனக்கும் கேடுவரும், சீக்கிரம்போ! உரலுள் தலையை விட்டுக்கொண்டவனைக் கண்டு உலக்கை விழுந்துவிடுமே என்று பரிதவிப்பதால் என்ன பயன். நான் நற்கதியடைய வேண்டும் என்ற எண்ணம் உண்மையாக உனக்கு இருக்குமாகில் ஸ்ரீராமருடன் என்நிலையை நன்றாக எடுத்துக் கூறி என்னைச் சீக்கிரம் கொன்றுவிடச் சொல். நீ காக்கப்பட்டது போல நானும் மேன்மைபெறக் கொடுத்து வைக்கவில்லை. என் போலியோரைத் தண்டனை மூலமாகத்தான் அவர்காத்தருளவேண்டும். இதை அவருடன் நன்றாகச் சொல்லிவிடு. அதிகமாக என்னிடம் பேசி என் மனதைக் கலக்கச் செய்தால் எனக்குக் கோபம் வரும். உனக்கும்கெடுதிவரும். நீ போயிருக்கும் மார்க்கம் உனக்குத் தகுந்தது. நான் இருக்கும் நிலை எனக்கும் அப்படியே.

விபீ.—விதியை யாரால் வெல்லமுடியும்? நல்ல குணமிருந்தும் அந்யாயமாக நீ இறக்கும்படி வந்துவிட்டதே! நான் என்னசெய்வது ? போய்வருகிறேன். என்றுகூறி மிகுந்த துக்கத்துடன் விபீஷணர் ஸ்ரீராமரிடம்வந்து நடந்தவைகளை விஸ்தாரமாகக் கூறிவிட்டார்.

அனுபந்தம் 4

வம்சவழி.

ஸ்ரீமத் ராமாயணம் பாலகாண்டத்தில்

ஸ்ரீ ராமருடைய கல்யாண ஸமயத்தில்

70—71-வது சருக்கத்தில் சொல்லியிருக்கிறபடி

ஜனகர், தசரதர் இவர்களுடைய வம்ச வழி.

ஜநக மகாராஜாவின் வம்சம்

நிமீசக்ரவர்த்தி	(கங)* திருஷ்டகேது மகாராஜா
மிதுசக்ரவர்த்தி	ஹரியசுவ மகாராஜா
ஜநக மகாராஜா	மரு மகாராஜா
உதாவஸு மகாராஜா	பிரதிந்தக மகாராஜா
நந்திவர்த்தன மகாராஜா	கீர்த்திரத மகாராஜா
ஸுகேது மகாராஜா	தேவமீட மகாராஜா
தேவராத மகாராஜா	விபுத மகாராஜா
ப்ருஹத்ரத மகாராஜா	மஹீத்ருக மகாராஜா
சூர மகாராஜா	கீர்த்திராத மகாராஜா
மகாவீர மகாராஜா	மகாரோம மகாராஜா
திருதிமான் மகாராஜா	ஸ்வர்ணரோம மகாராஜா
(கஉ) ஸுதிருதி மகாராஜா	ஹ்ருஸ்வரோம மகாராஜா

ஹ்ருஸ்வரோம மகாராஜாவின் புத்திரர்கள்:

1 ஜநக மகாராஜா — பெண்கள்: ஸீதை, ஊர்மிளை

2 குசத்துவஜா மகாராஜா — பெண்கள்: மாண்டவீ, ச்ருதகீர்த்தி

தசரத மகாராஜாவின் வம்சம்

பிரம்மா
|
மரீசி
|
காசியபர்
|
வைவஸ்வதமனு சக்கரவர்த்தி
|
இக்ஷ்வாகு மகாராஜா
|
குக்ஷி மகாராஜா
|
விகுக்ஷி மகாராஜா
|
பாண மகாராஜா
|
அநரண்ணிய மகாராஜா
|
பிருது மகாராஜா
|
திரிசங்கு மகாராஜா
|
துந்துமார மகாராஜா (அரிசசந்திரன் என்றும் பெயர்)
|
யுவநாசுவ மகாராஜா (ரோகிதாசுவன் என்றும் பெயர்)
|
மாந்தாதா மகாராஜா
|
சுசந்தி மகாராஜா
|
1 துருவசந்தி மகாராஜா — 2 பிரஸேநஜித்து மகாராஜா
|
பரத மகாராஜா
|
(கஅ) * அஸித மகாராஜா

(கக) * ஸகர மகாராஜா
|
அஸமஞ்ஜ மகாராஜா
|
அம்சுமான் மகாராஜா
|
திலீப மகாராஜா
|
பகீரத மகாராஜா
|
ககுத்ஸ்த மகாராஜா
|
ரகு மகாராஜா
|
கல்மாஷபாத மகாராஜா
|
சங்கண மகாராஜா
|
சுதர்சன மகாராஜா
|
அக்னிவர்ண மகாராஜா
|
சீக்கிரக மகாராஜா
|
மரு மகாராஜா
|
பிரசுசுருக மகாராஜா
|
அம்பரீஷ மகாராஜா
|
நகுஷ மகாராஜா
|
யயாதி மகாராஜா
|
நாபாக மகாராஜா
|
அஜ மகாராஜா
|
தசரத மகாராஜா

1 ராமர் — 2 பரதர் — 3 லக்ஷ்மணர் — 4 சத்துருக்கினர்

ராமர்: 1 குசன் — 2 லவன்

உத்தர ராமாயணம் 4-வது ஸர்க்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி.

ராக்ஷஸர்களுடைய வம்ச வழி

ஹேதி
|
வித்யுத்கேசன்
|
ஸுகேசன்

- **மால்யவான்**
  1. வஜ்ரமுஷ்டி
  2. விரூபாக்ஷன்
  3. துர்முகன்
  4. சுப்தக்னன்
  5. யஜ்ஞகோபன்
  6. மத்தன்
  7. உன்மத்தன்
  8. அனலை (பெண்)
- **ஸுமாலீ**
  1. பிரஹஸ்தன்
  2. அகம்பனன்
  3. விகடன்
  4. காலகார்முகன்
  5. தூம்ராக்ஷன்
  6. தண்டன்
  7. சுபார்சுவன்
  8. ஸம்ஹ்ராதி
  9. பிரகஸன்
  10. பாசகர்ணன்
  11. ராகை (பெண்)
  12. புஷ்போத்கடை (பெண்)
  13. கைகஸி (பெண்)
  14. கும்பீநஸி (பெண்)
  15. மைமராவணன்
- **மாலீ**
  1. அனிலன்
  2. அனலன்
  3. ஹரன்
  4. ஸம்பாதி

(விச்ரவஸ் ரிஷிக்குப் பிறந்தவர்கள்)

1. ராவணன்
2. கும்பகர்ணன்
3. சூர்ப்பநகை (பெண்)
4. விபீஷணன்

அநுபந்தம் 5

மைலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூலில் கேட்ட

சில ராமாயணக் கேள்விகள்

I. ராமருடைய கை மகிமையும் கால் மகிமையும் எந்தெந்தச் சமயங்களில் முதல் முதலில் தெரியவந்தன?

II. கொடிய துஷ்டனான ராவணனை ஒழிக்க மஹா விஷ்ணு எவ்விதமாக எந்தெந்தத் தேவர்களின் உதவியைக் கொண்டு உலகத்தில் அவதாரமானார்?

III. விசுவாமித்திரருக்கும் வஸிஷ்டருக்கும் சண்டைநேரிட்டதின் காரணமென்ன? அச்சண்டையினால் விசுவாமித்திரர் கடைசியில் அடைந்த பெரிய லாபமென்ன?

IV. கங்கையைப் பூலோகத்திற்குக் கொண்டுவர சூரிய வம்சத்தில் எந்தெந்த அரசர்கள் என்ன பிரயத்தனம் செய்தார்கள்? இடையில் ஏற்பட்ட தடைகளை எவ்வாறு வென்றார்கள்?

V. விசாலா நகரத்தைப்பற்றிய என்ன ஒரு பூர்வ சரித்திரம் விசுவாமித்திரரால் ராமருக்குச் சொல்லப்பட்டது?

VI. ஸீதா விவாஹத்திற்குப் பிறகு அயோத்திக்குப் போய்ச் சேரும்வரையில் ராமருடைய சரித்திரத்தை எழுதுக.

VII. குசநாபர், சுனச்சேபன், திரிசங்கு, கபிலவாஸுதேவர், ரிஷ்ய சிருங்கர், இவர்களின் சரித்திரத்தைச் சுருக்கமாக எழுதுக.

* * *

I. ராமாயணம் காவ்ய ரூபமாய் வெளிவரக் காரணமென்ன? இது வெளிவந்த கதையிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளும் நீதி யாது?

II. **(a)** தசரதரின் குணகுணங்களைப்பற்றி நீங்கள் அறிந்ததென்ன வென்பதைக் காரணங்களுடன் விவரிக்க?

(b) 'தீமை விதைத்தால் தீமை விளையும்' இந்த நீதி தசரதர் மரண காலத்தில் எவ்வாறு வெளி வந்தது?

III. ஜாபாலி மகரிஷிக்கும் ராமருக்கும் என்ன தர்க்கம், நடந்தது? அது எவ்வாறு முடிவு பெற்றது?

IV. (*a*) ராமர் வாலியைக்கொன்றது நியாயமா அநியாயமா? ஆதாரங்காட்டுக.

(*b*) ராமாயணத்தின் ஒரு காண்டத்திற்கு ஸுந்தரகாண்டமென்று பெயர் வந்த காரணமென்ன?

(*c*) "பக்தியாலாகாததொன்றுமில்லை" என்பது ஹனுமார் செயல்களிலிருந்து எப்படித் தெரியவருகிறது? விவரிக்க.

V. (*a*) "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் கருத்தை விளக்குகின்ற கதையை எழுதுக.

(*b*) 'கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப் பூச்சி' என்பதை நாம் அறிந்துகொள்ளக்கூடிய சரித்திரத்தை எழுதுக.

VI. திரிசங்கு ஸ்வர்க்கம், ஸாகரம், இந்திரஜித்து, ஸீதை, பிராயோபவேசம், ஆதித்ய ஹ்ருதயம், அசுவமேத யாகம், சுத்தாச்ரமம் இவைகளுக்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

VII. ராமர் லங்கையிலிருந்து அயோத்திக்குத் திரும்பி வந்ததும் கைகேயியை நோக்கி,

"பெற்றகோ னன்பு* நீக்ரு பரதன்
பெருமையும் மாருதி திறமும்
எற்றரு† வான ராதிப னட்பும்
இலக்குவன் மிக்பகத் திமையும்?
உற்ற ஜா னகியின் மெய்மையு மென்வலியும்
ஒன்னலார்‡ பகைமையி னியல்பும்
மற்றவு மறிந்தே னுன்றனல் தாயே
வந்தனம் நின்திரு வடிக்கே"

என்றார்.

இந்தப் பாட்டில் குறிப்பிக்கப்பட்டிருப்போரது சிறப்பைக் காட்டும் கதா பாகங்களைக் குறிப்பிக்க.

---

* கோன் = அரசன். † எற்றரு = ஸூரியன் பெற்ற. ‡ ஒன்னலார் = பகைவர்.

I. அயோத்தியா காண்டத்தைத் தசரதர் மரணத்தோடு பூர்த்தி செய்யாது ஆரண்யகாண்டத்திற் சேர்ந்தனபோல் தோற்றும் வனவாஸ விஷயங்களையும் இக்காண்டத்திற் சேர்த்து வைப்பானேன்?

II. இந்திரஜித்தின் சரித்திரத்தைச் சுருக்கி எழுதுக.

III. "ஆனைக்கும் அடிசறுக்கும்" என்ற பழமொழியின் உண்மை ராவணனுடைய திக்விஜயத்தில் எந்தச் சந்தர்ப்பங்களில் எவ்வாறு வெளிவந்தது?

IV. "தான தர்மாதி பரோபகார விஷயங்களில் சற்றேனும் பழகாதிருக்கையில் எவ்வளவு தபோதனம் ஒருவனிடமிருந்தாலும் அது பயன்படாது" என்ற கருத்தை வெளியிடும் கதையையும் அது வெளிவந்த சந்தர்ப்பத்தையும் தெளிவாய் எழுதுக.

V. ராவணன் ஸீதையைத் தூக்கிக்கொண்டு போனதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது?

VI. பூர்ண கர்ப்பிணியான ஸீதையை ஊர் வாயை மூடுவதற்காக ராமர் விலக்கிவைத்தது நியாயமா? காரணங் கூறுக.

VII. ஆரண்ய காண்டத்தில் உள்ள கதையின் ஒழுங்கை நன்றாக எடுத்து விளக்கி எழுதுக.

VIII. பின் வருபவைகளுக்கு விளக்கக் குறிப்பெழுதுக:— ஹனுமார், லவணன், மஹாப்ரஸ்தானம், சம்பூகன், அக்னிப்ரவேசம், புஷ்பகம்.

* * *

I. பிள்ளை யடைவதற்காகத் தசரதர் புத்திர காமேஷ்டி யாகம் செய்ய வேண்டியிருக்க முதலில் அசுவமேத யாகம் செய்வானேன்?

II. தம்மிடம் சகல சக்திகளும் அமைந்திருக்க, தாமே அஸுரர்களைக் கொன்று யாகத்தை ரட்சித்துக் கொள்ளாமல் விசுவாமித்திரர், ராமலக்ஷ்மணர் மூலமாய்க் காரியத்தை முடித்துக் கொள்வானேன்?

III நீங்கள் படித்த பாடத்திலிருந்து ஆதாரங்காட்டிக் கைகேயியினுடைய குறை குணங்களைப்பற்றி விஸ்தாரமாய் எழுதுக.

IV. தசரதர் மரணத்திற்கு எவ்வெவ்விஷயங்கள் காரணமாயிருந்தன? விவரிக்க.

V. ராமரை அயோத்திக்குத் திரும்பிவரும்படி யார் யார் எந்தெந்தக் காரணங்களால் தூண்டினார்கள்? அதற்கு அவர் எவ்வாறு தகுந்த விடை கொடுத்தார்?

VI. மாரீசனுக்கு ராமருடைய பல விசேஷம் எப்போது எவ்வாறு தெரியவந்தது? இப்படி இருந்தும் இவன் பொன் மானாகி ராவணனுக்குச் சகாயம் செய்ய வருவானேன்?

VII, ஜடாயு யார்? இவர் ராமர் விஷயமாய் எப்படி உதவி செய்தார்?

VIII. பின் வருபவைகளுக்கு விளக்கக் குறிப்பெழுதுக:— பாகீரதி, சுனச்சேபன், கூனி, குஹன், ஜனஸ்தானம், சபரீ.

***

I. வால்மீகி ராமாயணம் எழுதுவதற்கு யார் யார் எவ்வாறு உதவி செய்தார்கள்?

II. வால்மீகியினுடைய மனங்கரைந்து வெளிவந்த அனுஷ்டுப் சுலோகத்தில் அடங்கியிருக்கும் இரண்டுவித அர்த்தங்களையும் எழுதுக.

III. தசரதற்கு ராமரிடம் இருந்த அன்பானது முதலில் எவ்வாறு வெளிவந்தது? விவரிக்க.

IV. கங்கைக்குப் பாகீரதி, ஜாஹ்நவி என்று இரண்டு பெயர்கள் வரக் காரணமென்ன?

V. க்ஷத்ரியபலம் என்ன பலம்? அதைச் சுடவேண்டும். பிரம்மதேஜஸ்ஸின் பலமே பலம்"—இந்த வாக்யத்தின் பொருளை விளக்கி இது பிறந்த ஸந்தர்ப்பத்தையும் நன்றாய் விவரித்தெழுதுக.

VI. விசுவாமித்திரர் பிராம்மண்யம் சம்பாதிக்கச் செய்த தபஸை எந்தெந்த ஸமயங்களில் அவர் எவ்வாறு இழக்கும்படி நேரிட்டது?

VII. பின் வருபவைகளுக்குச் சிறு விளக்கக் குறிப்பெழுதுக. ரிசிய சிருங்கர், பரசுராமர், அகல்யை, சிவதனுஸ், காமதேனு, ஸுமந்திரர்.

I. (a) வாலி சுக்ரீவனைத் துரத்தக் காரணமென்ன?

(b) வாலியால் துரத்தப்பட்ட ஸுக்ரீவன் ரிசியமூக மலை வந்து ஒளிவானேன்?

II. ராமர் பலசாலியான வாலியை ஸ்நேகஞ் செய்து கொள்ளாது ஸுக்ரீவனை ஸ்நேகஞ் செய்வானேன்?

III. ராமாயணத்தின் ஒரு பாகத்திற்கு ஸுந்தரகாண்டமென்று பெயரிட்டது சரிதான் என்பதற்குப் பல காரணங்கள் என்ன?

IV. ஸம்பாதி யார்? தெற்கு ஸமுத்திரக் கரையில் இவன் இருக்கக் காரணமென்ன? ராமர் விஷயத்தில் ஸம்பாதி செய்த வாக் ஸகாயமென்ன? இப்படிச் செய்ததில் அவனுக்கு உண்டான லாபமென்ன?

V. ஹனுமார் ஸமுத்திரத்தைத் தாண்டுகையில் அவருக்கு வந்த ஆபத்துக்களென்ன? எவ்வாறு அவர் அவைகளைத் தீர்த்துக்கொண்டார்?

VI (1) ராமர் பெருமையை விளக்க ராமாயணத்தில் சில முக்கிய பாகங்களை விவரித்து எழுதுக.

(2) ஸீதை குற்றமற்றவளென்று நன்றாய்த் தெரிந்திருக்க லங்கையில் அவளைத் தீ குளிக்கச் செய்வானேன்?

VII. இந்திரஜித், அங்கதன், விபீஷணன் இவர்களைப் பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

***

I. (1) தாடகை என்ற பேர்வந்த காரணம் என்ன? ஸ்திரீயைக் கொல்லும்படி ராமரை விசுவாமித்திரர் ஏவியது நியாயமா?

(2) ஸித்தாச்சிரமத்தில் ராம லக்ஷ்மணர்கள் எவ்வாறு யாகத்தை ரக்ஷித்தார்கள்?

(3) விசுவாமித்திரர் யார்? இவருக்கும் வஸிஷ்டருக்கும் முதலில் எப்படி விரோதம் உண்டாயிற்று?

II. (1) ராமர் வனம் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் என்ன செய்தார்?

(2) ராமர் அயோத்தியைவிட்டுப் போகையில் என்ன விசேஷம் நடந்தது?

(3) ராமனிடம் பரதர் பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு என்ன செய்தார்?

III. (1) சூர்ப்பநகை ராமருக்கு விரோதமாய் என்ன என்ன செய்தாள்?

(2) ஸீதை போகும் வழியில் ராமருக்கு, தான் போனவழியைத் தெரிவிக்க அவள் செய்த உபாயமென்ன?

(3) கபந்தனுக்கும் ராமருக்கும் என்ன சம்பாஷணை நடந்தது? கபந்தன் எவ்வாறு சாபம் நீங்கினான்?

IV. ரிஷ்ய சிருங்கர், பரசுராமர், பகீரதன் இவர்களைப் பற்றித் தெரிந்தவரையில் எழுதுக.

அநுபந்தம் 6

ராமாயணத்தின் உட்பொருள்

பீடிகை

இதிஹாஸ புராணங்களில், அநேக நீதிகளும், ஒழுக்கங்களில் விபரங்களும் அடங்கியிருக்கின்றன என்பது, அவைகளை வாசிக்கும் எல்லோருக்கும் வெளிப்படையாய்த் தோன்றும் விஷயமே. இப்படி வெளிப்படையாய்க் காணப்படும் நீதிகளைத் தவிர புராண கதைகளின் அமைப்பில் வேத ரகஸியங்களாகிய உட்பொருள்களும் ஆங்காங்கே மறைந்து கிடக்கின்றன. இப்புராண இதிஹாஸங்களில் வர்ணித்திருக்கப்பட்ட யுத்தங்கள் மோக்ஷ மார்க்கத்தில் ஒரு முமுக்ஷு படும் கஷ்டங்களைக் குறிக்கின்றன என்று கொண்டால், துர்வாஸனைகளை அடக்கி, நல்லவாஸனைகளை விருத்தி செய்து முடிவில் மனிதன் பரமபதம் அடைவதற்கு வேண்டிய உபாயங்கள் அடங்கிய வேதங்களின் நோக்கத்தைப் புராண கதைகளாகவே உருவகப்படுத்தி இருக்கின்றார் நமது பெரியோர் என்பது நமக்கு எளிதில் விளங்கும். இங்கு ராமாயணத்தில் இவ்வாறு மறைந்து கிடக்கும் உட்பொருளை ஒருவாறு தொகுத்துக் கூறுவோம்.

அத்யாத்ம ராமாயணத்தில் காணப்படும் உட்பொருள்

‘பாலகாண்டம் 1-வது ஸர்க்கம்.

மோக்ஷமென்ற அயோத்திமாநகரில் பிரமமென்ற தசரதர், ஞானசக்தி இச்சாசக்தி கிரியாசக்தியாகிய கௌஸல்யை ஸுமித்ரை கைகேயி என்ற மனைவிகளோடு அரசாண்டு வந்தார். அப்பொழுது ஞானசக்தி இடம் ஆத்மாவாகிய ராமர் தோன்றினார். அவ்யக்தமாகி குழந்தைப் பருவத்தில் தன் நிஜஸ் ரூபத்தை மறந்து சிரவணமென்னும் வசிஷ்டரது உதவியால், வைராக்கியமாகிய லக்ஷ்மணரோடு மனனமென்ற விச்வாமித்திரரை அடுத்து, பின்பு அவரை முன்னிட்டுக்கொண்டு ஆத்மாவாகிய ராமர், பாபங்கள் என்னும் கொடிய அரண்யங்கள் முதலியவைகளைத் தாண்டிச் சென்று, ஞானமாகிய அம்பால் ஆவரணமாகிய தாடகையைக் கொன்று, இச்சையாகிய மாரீசனைத்

தன்னை அநுமானப்படி வெருட்டி ஓட்டிவிட்டார். அதன்பின்பு ஏகாந்தமென்னும் மிதிலா நகரத்துட் சென்று, சாந்தமென்னும் ஜனகராஜனது ஆனந்தமென்னும் ஸீதையாகிய பெண்ணை விவாஹம் செய்துகொண்டு ஆத்மாவாகிய ராமர் மதமாகிய பரசுராமரைத் தலையெடுக்க வொட்டாது பங்கப்படுத்திவிட்டு 'நான் பிரும்மபின்னனான ஜீவனல்ல' என்று தெளிய, மோக்ஷமென்னும் அயோத்தியை அடைந்தார்.

ஜீவப்பிரம்ம ஐக்கியமாகிய பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடப்பதை, கிரியா சக்தியாகிய கைகேயி சஞ்சலமென்னும் கூனியால் அறிந்து, பிரம்மமாகிய தசரதருக்கும் ஆத்மாவாகிய ராமருக்கும் பேதமுண்டாக்கினார். உடனே ஆத்மாவாகிய ராமர், ஆனந்தமாகிய ஸீதை, வைராக்கியமாகிய லக்ஷ்மணன், ஆகிய இவர்களோடு சித்தமென்னும் ஸரயூவைத் தாண்டி, புத்தி என்ற குஹனோடு நேசித்தார். பின்பு விக்ஷேபம் என்ற காட்டின் வழியாகத் தபஸ் என்ற சித்திரக்கூடத்தை அடைந்து, மனஸ் என்ற காகாஸுரனுடைய ஸங்கல்பம் என்ற கண்ணைக் கெடுத்து, நிர்விகல்பம் என்ற கண்ணை இருந்தபடிவிட்டு, அங்கு ஆத்மாவாகிய ராமர் ஸுகமாய் இருந்தார்.

இதன் பின்பு விக்ஷேப வனத்தின் வழியாய்ப் போகையில், எதிர்ப்பட்ட அகங்காரம் என்னும் விராதனைக் கொன்று, வீர்யம் என்ற அகஸ்தியரைத் தரிசித்து, தைரியம் என்ற அஸ்திரத்தை வாங்கிக் கொண்டு, காமம் என்ற சூர்ப்பநகையை அடக்கினார். அப்பொழுது அதனால் எழுந்த ஆகாமி காமமென்ற கரதூஷணாதிகளை வென்றார். இப்படி இருக்கையில் முன்னமேயே ஒழிக்காது விட்டிருந்த இச்சை என்ற மாரீசன் மறுபடியும் வர, அதனால் ஆனந்தமென்ற ஸீதையைப் பிரிந்து ஆத்மா என்னும் ராமர் போக, ரஜோகுணம் என்ற ராவணன் வந்து, ஆனந்தமாகிய ஸீதையைக் கொள்ளைகொண்டு போய், துக்கம் என்ற லங்கையில் விசாரம் என்ற அசோகவனத்தில் வைத்து, அசுத்த வாசனைகளாகிய ராக்ஷஸிகளைக் காவலாக ஏற்படுத்தினான். இப்படி இருக்க, இச்சை என்ற மாரீசனைத் துரத்திச் சென்று ஆத்மாவாகிய ராமர் கொன்று, நிராசை என்ற பூமியில் அவனைப் புதைத்தார். அப்பொழுது ஆனந்தம் நஷ்டமாய்ப் போனதை ஆத்மாவாகிய ராமர் கண்டு, துக்கித்துக்கொண்டு வைராக்கியமாகிய லக்ஷ்மணனோடு விக்ஷேபம் என்ற காட்டில் மறுபடியும் திரிந்து, சிந்தை என்ற கபந்தனைக்கொன்று, [illegible]தாவம் என்ற சபரியினிடம் வந்தார்,

ஸந்தோஷம் என்ற சபரியால் ஏவப்பட்டு, ஆத்மாவாகிய ராமர் நிதித்யாஸனமாகிய ஹனுமாரைத் தூதனாக அடைந்து, ஆனந்தமாகிய ஸீதையை ஸதா த்யானம் செய்து, ஜனனமென்ற ஸப்தஸால விருக்ஷங்களை அழித்து, பயம் என்ற வாலியைக் கொன்று நிர்ப்பயம் என்னும் ஸுக்ரீவனைக் காத்தார்.

அதன்மேல் நிதித்யாஸனமென்ற ஹனுமார் மோஹமென்ற ஸமுத்திரத்தைத் தாண்டி, லோபம் என்ற லங்கிணியைக் கொன்று, அசுத்த வாசனையாகிய ராக்ஷஸ வீரர்களைச் சிதற அடித்து, ஆனந்தமென்ற ஸீதையைக்கண்டு, ராஜஸம் என்ற ராவணனை எதிர்த்து, மௌனமென்ற நெருப்பால் துக்கமாகிய லங்கையை எரித்து, ஆத்மாவாகிய ராமருக்கு ஸ்வானுபூதி என்ற ஸந்தோஷம் வரும்படி செய்தார்.

இதன் பின்பு மோஹம் என்ற ஸமுத்திரத்தின் கரையில் ஆத்மா என்ற ராமர் வந்துசேர, ஸத்வகுணம் என்ற விபீஷணர் வந்து இவரிடம் குடிகொண்டார். உடனே மோஹம் என்ற ஸமுத்திரத்தைத் தடுத்து, தமோகுணமென்ற கும்பகர்ணனைக் கொன்று, ரஜோகுணமாகிய ராவணனை வெருட்டுங்கால், வைராக்கியம் என்ற லக்ஷ்மணர் க்ரோதம் என்ற இந்திரஜித்தின் பிரமை என்ற பாசக்கயிற்றால் கட்டுப்பட்டு, மோஹம் என்ற மூர்ச்சையிலிருந்தார். அப்பொழுது நிதித்யாஸனம் என்ற ஹனுமார், நிஷ்டை என்ற ஸஞ்சீவி பர்வதத்தை எடுத்து வந்து, வைராக்கியம் என்ற லக்ஷ்மணருக்குப் பலம் என்ற தெளிவை உண்டாக்க, அவர் உடனே க்ரோதம் என்ற இந்திரஜித்தைச் சீக்கிரத்தில் கொன்றார். இப்படியிருக்கையில், ஸஞ்சித கர்மம் என்ற மூலபலப்படைகள் கோடிக்கணக்காக வர, ஆத்மா என்ற ராமர் தைரியம் என்ற மோஹனாஸ்திரத்தைப் பிரயோகம் செய்து, அவைகளை வேரோடு நாசமாக்கினார். உடனே சுத்தவாஸனைகள் என்ற வானரர்கள் தலை தூக்கினார்கள். இதன் பின்பு ஆத்மாவாகிய ராமர், ரஜோகுணமாகிய ராவணனை எதிர்த்து, அகங்காரமென்ற அவன் மார்பைப் பிளந்து, பத்து இந்திரியங்களாகிய அவன் சிரங்களைக் கொய்து, ஆனந்தமென்ற ஸீதையை மௌனம் என்ற அக்னியிற் பரிசுத்தமாக்கி, அவளோடுசேர்ந்து மோக்ஷமாகிய அயோத்தி வந்தார். அங்கு ஜீவப்பிரம்ம ஐக்கியம் என்ற பட்டாபிஷேகம் செய்துகொண்டு, தாமே பிரம்மமாகிய தசரதராகி ஆத்மாவாகிய ராமர் பிரகாசித்தனர்,

ஆனந்த ராமாயணத்தில் காணப்படும் உட்பொருள்

(4 விலாஸ காண்டம், 4-வது ஸர்க்கம்)

ஸச்சிதானந்தமாகிய விஷ்ணு என்ற ஸாகரத்தில், பூபார ஹாரணமென்ற இச்சையாகிய அலைதோன்ற, அதின் திவலை ஆத்மாவாகப் பரிணமித்தது. அப்பொழுது ஹிருதயாகாசமாகிய அயோத்திமா நகரத்திலிருக்கும் சுத்த ஸத்வாந்தக்கரணம் என்ற தசரதருக்கு, இந்த ஆத்மா நான்கு பிள்ளைகளாகத் தோன்றினான். சுத்த ஸத்வாந்தக்கரணமாகிய தசரதருக்கு, ஸுபுத்தியாகிய கௌஸல்யை இடம், துரீயாத்மாவாகிய ராமரும், குபுத்தியாகிய கைகேயி இடம் ஸ்வப்னாத்மாவாகிய பரதரும், மத்யம புத்தியாகிய ஸுமித்ரையிடம் ஜாக்ரதாத்மாவாகிய லக்ஷ்மணரும், ஸுஷுப்தி ஆத்மாவாகிய சத்துருக்கினரும் உண்டானார்கள். இவ்வாறு தோன்றிய துரீயாத்மாவாகிய ராமர், விசுவாமித்திர யாக ஸம்ரக்ஷணம் என்ற மனோவேகத்தால் இழுக்கப்பட்டு, ஜாகரதாத்மாவாகிய லக்ஷ்மணரோடு ஸம்ஸாரமாகிய அரண்யத்தின் வழியாகப் போகையில், கெட்ட மனோவிருத்திகளாகிய தாடகையை வதம்செய்து, அதன்மேல் மனோவேக பங்கம் என்ற தனுர்பங்கத்தைச் செய்து பின்பு சுத்த மாயையாகிய ஸீதையை விவாஹம் செய்துகொண்டார். அதன்பின்பு அம்மாயையின் பூர்வ ஸம்ஸ்காரங்களாகிய பரசுராமரை நிக்கிரஹம் செய்தார்.

இவ்வாறு ஆனதும், ஹிருதயாகாசமாகிய அயோத்தி அடைந்து, துரீயாத்மாவாகிய ராமர், ஸ்வப்ன ஸுஷுப்தி ஆத்மாக்களாகிய பரதசத்துருக்கினனைப் பிரிந்து, ஜாக்ரதாத்மாவால் ஆதரிக்கப்பட்டு, சுத்தமாயையின் ஸம்பந்தத்தால் வரும் ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார். இப்படி இருக்கையில், சுத்தாந்தக்கரணம் என்ற தசரதருக்குத் துரீயாத்மாவை அடுத்து ஸந்தோஷம் அடையவேண்டும் என்று தோன்ற, அவர் அதற்கு வேண்டிய ஸாதனமாகிய தியானம் என்ற பட்டாபிஷேகத்தை நடத்த முயற்சி செய்தார். இந்த சங்கதியைச் சஞ்சலமென்ற கூனியால் அறிந்த குபுத்தி என்ற கைகேயி, ஸ்வப்னாத்மாவாகிய பரதனை சுத்தாந்தக்கரணத்தில் குடிகொள்ளவேண்டும் என்றும், துரீயாத்மாவாகிய ராமர் ஸம்ஸாரமாகிய அரண்யத்தில் திரிந்து வெளிவரவேண்டும் என்றும் தூண்ட, அதன்படியே துரீயாத்மாவாகிய ராமர் நடப்பதாக ஒப்புக்கொண்டு, அந்த மாயை

ஜாக்ரதாத்மா ஆகிய இவைகளோடு, ஸம்ஸாரமாகிய அரண்யம் சென்றார். அப்பொழுது துரீயாத்மா ஸம்பந்தமற்ற சுத்தாந்தஃகரணமாகிய தசரதர் தமது உருவம் நீக்கினார்.

ஸம்ஸாரமாகிய அரண்யம் சென்று, துரீயாத்மாவாகிய ராமர் டம்பமாகிய விராதனைக் கொன்று, தேகமாகிய பஞ்சவடியை அடைந்து, பஞ்சபூதமாகிய பர்ணசாலையைக் கட்டிக்கொண்டு, அதில் ஒருவாறு விச்ராந்தி அடைந்தார். அக்காலத்தில் அவருக்கு எதிராய் எழுந்த ஆசையாகிய சூர்ப்பனகையை அவர் அடக்க முயல, அப்பொழுது புற்றீசல்போல் கிளம்பி வந்த காமக்ரோத லோபாதிகளாகிய கரதூஷண திரிசிரஸ் முதலிய ராக்ஷஸர்களை வேரறுத்தார். அக்காலத்தில் மோஹமாகிய மாரீசனால் இழுக்கப்பட்டு, ராமர் சுத்தமாயையாகிய ஸீதையைப் பிரிய, அவளை அகங்காரம் என்ற ராவணன் கவர்ந்துகொண்டான். அவள் உடனே தாமஸநிலையை அடைந்தாள். மோஹமாகிய மாரீசனைக் கொன்றபின்பு, துரீயாத்மாவாகிய ராமர் சுத்தமாயை என்ற ஸீதையினுடைய நிஜ ஸ்வரூபத்தைக் காணாமல், மிகுந்த துக்கப்படுகையில், ஜாக்ரதாத்மாவாகிய லக்ஷ்மணரது ஸஹாயத்தால் துக்கம் என்ற கபந்தனை அழித்து ஸந்தோஷமாகிய சபரியை அடைந்தார்.

ஸந்தோஷம் என்ற சபரியால் ஏவப்பட்டு, துரீயாத்மாவாகிய ராமர் விவேகமாகிய ஸுக்ரீவனையும், பக்தியாகிய ஹனுமானையும் அடைந்து, அவைகளை நிலையாய் இருக்கும்படி செய்வதற்காக அவிவேகமாகிய வாலியைக் கொன்றார். பின்பு விவேகம் என்ற ஸுக்ரீவன் பக்தி என்ற ஹனுமாரை, சுத்தமாயை இருக்கும் நிலையைத் தெரிந்து வரும்படி அனுப்பினான்.

அப்பொழுது பக்தி என்ற ஹனுமார், தமது சிறப்பால் ஸ்தூலதேகம் முதலிய இடையூறுகளால் நிறைந்த அக்ஞானம் என்ற ஸமுத்திரத்தை எளிதில் தாண்டி, லிங்கதேகம் என்ற லங்கையை அடைந்து, அகங்காரமாகிய ராவணனால் தாக்கப்பட்டு அசுத்தமாகிய துக்கத்தில் மூழ்கி, தாமஸ நிலையை அடைந்து துக்கப்படும் ஸீதையைக் கண்டு துரீயாத்மாவிடம் ஸங்கதியைத் தெரிவித்தார்.

அப்பொழுது விவேகம் என்ற ஸுக்ரீவனோடும், அவன் பரிவாரங்களாகிய நல்ல வாஸனைகள் என்ற வானர சேனையோடும், துரீயாத்மாவாகிய ராமர் அக்ஞானம் என்ற ஸமுத்

திரத்தின் கரை வந்தார். அங்கு உத்ஸாஹம் என்ற விபீஷணர் வந்து சேர, அவரது தூண்டுதலால் அஞ்ஞானத்தைத் தாண்டும் உபாயமாகிய ஸேதுபந்தத்தை நன்றாகச் செய்து, லிங்கதேகம் என்ற லங்கையை அடைந்து, மதம் என்ற கும்பகர்ணனையும் மத்ஸரம் என்ற இந்திரஜித்தையும் கொன்று, முடிவில் அகங்காரம் என்ற ராவணனைத் துரீயாத்மாவாகிய ராமர் வெட்டிச் சாய்த்தார். இதன்பின்பு, அசுத்தமாயிருந்த மாயையாகிய ஸீதையை, சித்தசுத்தி என்ற அக்னியால் பரிசுத்தமாக்கி அவளை ஸாத்விக நிலையை அடையும்படி செய்து, அவளை ராமர் அங்கீகரித்துக்கொண்டார். எல்லாம் முடிந்த உடன், துரீயாத்மாவாகிய ராமர் தமது நல்ல ஸ்நேகிதர்கள் முதலியவர்களோடு லிங்கதேகமாகிய லங்கையைவிட்டு, ஹிருதயாகாசமாகிய அயோத்யை வந்து, ப்ரஹ்மானந்தம் என்ற ராஜ்யபோகத்தை அடைந்தார்.

முடிவில் ஸரயூவிற் பிரவேசிப்பதாவது, ஹ்ருதயாகாசத்தை மஹாகாசத்தில் லயிக்கும்படி செய்து ஸச்சிதானந்த ரூபமான விஷ்ணு ரூபத்தைத் துரீயாத்மாவாகிய ராமர் அடைந்து ஸாயுஜ்யமாகிய முக்தியை அடைவது.

அனுபந்தம் 7

ராமாயண ஸாரம்

(१) एकश्लोकि रामायणम्

आदौ रामतपोवनाभिगमनं मायामृगध्वंसनं
वैदेहीहरणं जटायुमरणं सुग्रीवसंभाषणम्।
बालीनिग्रहणं समुद्रतरणं लंकापुरीदाहनं
पश्चाद्रावणकुंभकर्णहननं चैतद्धि रामायणम्॥

ராமாயணம் அடங்கிய பாட்டு

திருவனம் சேறல் பொன்னுழை கோறல்
ஜாநகி இலங்கையின் ஏறல்
எருவைமெய் விள்ளல் கதிர்மகன் நள்ளல்
இந்திரன் மகன்உடல் தள்ளல்
பொருதிரை தாவல் இலங்கைதீ மேவல்
போரிடை இராவண கும்ப
கருணர்போய் ஓவல் எனுமிவை ராம
கதையிடைப் பொதிவுடை பொருளே.

(இதன் பொருள்)

வ்ருக்ஷங்கள் நிறைந்த காட்டில் (ராமர்) செல்லுதல், பொன் மானைக் கொல்லுதல், ஸீதை லங்கையில் அமருதல், கழுகு (ஜடாயு) தேகத்தை விடுதல், ஸூர்யபுத்ரன் (ஸுக்ரீவன்) ராமனை ஸ்நேஹித்தல், இந்த்ரபுத்ரன் (வாலி) தேஹத்தை விடுதல், மோதிக்கொண்டிருக்கும் அலைகளையுடைய (ஸமுத்ரத்தை ஹனுமார்) தாண்டுதல், லங்கை நெருப்புப் பற்றுதல், சண்டையில் ராவண கும்பகர்ணர் இறத்தல் ஆகிய இவைகளே ராமகதையில் அடங்கியுள்ள பொருள்கள்.

(2) ஸம்க்ஷேப ராமாயணம்

ஸ்ரீராமர் துதி

அண்டர்தம் துயரம் தீர, அயோத்திமா நகரில் வந்து
தண்டகா ரணியம் சென்று. ஸமக்கிரமீ கணையாய்க் கட்டி

தொண்டரா வணனை மாட்டக் கோதண்டங் கையிலேந்தும்
புண்டரீகக் கண்ணன் ராமன் பொன்னடிக் கமலம் போற்றி.

—சீர்காழி அருணசல கவிராயர்.

கீர்த்தனை: ராகம் - பைரவி - சாப்புத்தாளம்

பல்லவி

ராமபஜனை செய்தால் மனமே யுனக் கொரு
நாளுங் கவலை இல்லையே!

அனுபல்லவி

பீமன் தசரதேந்த்ரன் நேமமிகுதவத்தில்
பிறந்துபுவன மெங்கும் சிறந்த ஸ்ரீஹரிஹரி (ராம)

சரணங்கள்

1. கௌசிகன் பின்சென்று யாகத்தைக் காத்து
கொடியதாடகை ஸுபா குவை மாயப் பார்த்து
மாசிலாத ஹலிகை சாபத்தைத் தீர்த்து
மாருத்ரன் வில்லொடித்து மனநன்பு பூத்து

வனிதை ஜானகியை
யினிதுடன் மங்கல
மணஞ்செய்து மகிழ்ந்து
குணம் பெருங் கல்யாண (ராம)

2. அன்னை சொற்படி பர தற்கரசீந்து
அருள் ஜானகி தம்பியோ டிருள் வனஞ்சேர்ந்து
பன்னு முனிவராக்க பயப்ரதங்கூர்ந்து
பஞ்சவடியில் சூர்ப்ப நகை கர்வம் காய்ந்து

பலந்திகழ்கார
தூஷணன் திருசிரன்படை
துலைந்திடவே செய்து
நலம் பெருகும் ஜேய (ராம)

3. கதிரவனருள் ஸுக்ரீ வனைநண்பு பிடித்து
கனவாலி யுயிரைக் கணையொன்றில் மடித்து
மதிபேறனுமானை லங்கைக்கு விடுத்து
லங்கை நிலை யறிந்து தென்கடல் தடுத்து
வடிகணை கொடோ

வணன் முதலோர் முடி
பொடிபடவே செய்து
விடும் வீரகோதண்ட (ராம)

4. பொருது விபீஷணன் லங்கைக் கரசென்று மதித்து
புஷ்பகமீதினில் சேவடிபதித்து
கருமுகில்போ லயோத்தி நகரில்வந்துதித்து
கனகமகுடம் புனைந் தனைவரும் துதித்து

கவிகுஞ்சரம் நிதம்
நவிலும தச்சதமிழ்க்கு
சுபகர மருளும்
ரவிகுல பட்டாபி (ராம)

-----மதுரை ஜில்லா வித்வான் கவிகுஞ்சர பாரதிகள்

அநுபந்தம் 8

ஸ்ரீராம நாமச் சிறப்பு

திருந்தும் நமசிவாய நாராயணா என்று
ஜெபிக்கு மந்திரம் இரண்டும் மெய்தானே.
உரைக்கும் மந்திர மிரண்டில் இரண்டாம் எழுத்திரண்டும்
ஒரு ராமனாகி வந்த பெருமானே.

என்று ராமநாமச் சிறப்பை எடுத்து வெளியிடுகிறார். **சீர்காழி அருணாசல கவிராயர்.—**

நமசிவாய, நாராயணாய என்று கூறப்படும் பஞ்சாக்ஷர அஷ்டாக்ஷர மஹா மந்திரங்களுக்கு **ரா, ம** என்னும் எழுத்துக்களை உயிர் அக்ஷரங்கள் என்று கூறுவர் பெரியோர். இம் மந்திரங்களின் சிறப்பை வெகு விஸ்தாரமாகக் கூறி இவைகளை ஜெபிப்பதால் அடையக்கூடிய நிலையையும் வெகுவாக விவரித்திருக்கின்றனர் நம் முன்னோர். இத்தகைய சிறப்புவாய்ந்த இம் மந்திரங்களில் முற்கூறிய உயிரக்ஷரங்களை நீக்கிவிட்டால் இவைகள் உயிரற்ற உடம்புபோல நிஸ்ஸாரமாகிவிடுகின்றன. **நமசிவாய** என்பதில் **ம**வை எடுத்துவிட்டால் அது **நசிவாய** என்றாகும். இதற்குப் பொருள் மங்களம் இல்லை என்று ஆகி நமசிவாய மந்திரத்தின் சிறப்பு நீங்க, இது ஒரு கொடிய வாக்காகி விட்டது. இம்மாதிரியே **நாராயணாய** என்பதன் கதியும். **ரா** என்ற எழுத்து நீங்கிய காலத்தில் அது **நாயணாய** அதாவது மோக்ஷம் இல்லை என்று பொருள்படும் (இங்கு அயனம் என்ற பதத்திற்கு மோக்ஷம் அல்லது கதி என்பது பொருள். 'நான்ய: பந்தா **அயநாய** வித்யதே' என்ற வேத வாக்கியத்தோடு ஒப்பிடுக) **ஆகவே, ராம, என்ற** எழுத்துக்கள் உள்ளபொழுது ஸகல சாஸ்திர ரஹஸ்யங்களையும் அடக்கியுள்ள மஹா மந்திரங்கள். அவை நீங்கிய காலத்தில் பொருளிழந்து சாஸ்திர எதிர்மறைப் பதங்களாக மாறிவிடுவதால் இவைகள் இம்மந்திரங்களுக்கு உயிர் அக்ஷரங்கள் என்று மதிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான சைவ வைஷ்ணவ மஹாமந்த்ர, உயிர் அக்ஷரங்களாலாகிய நாமமாதலால் **ராம** என்ற நாமம் பெரியோர்களால் ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டிக் கரை ஏற்றுவிக்கத் தக்க **தாரகமந்திரம், தாரகப்ரஹ்மநாமம்** என்று நன்கு பாராட்டப்படுகிறது. இதுபற்றி பரமசிவன் பார்வதிக்கு,

श्रीरामरामरामेति रमेरामेमनोरमे ।
सहस्रनामतस्तुल्यं रामनामवरानने ॥

என்று உபதேசித்திருக்கிறார்.

முன்னர் நாம் எடுத்துக்கூறியுள்ள கவிராயர் கீர்த்தனையில்' இந்த ரஹஸ்யப்பொருள் அடங்கியிருப்பதோடுங் கூட அங்கு காணப்படும் மஹாமந்திரங்களின் அமைப்பை நோக்கில் மரா என்ற நாமம் ஒன்று ஏற்படுகின்றது. இதற்கும் மிகுந்த சிறப்பு உண்டு இதை உச்சரித்துக்கொண்டே வந்தால் கொஞ்ச நாழிகையில் ராம நாமத்திற்குக் கொண்டு சேர்க்கும். இந்த மரா நாமத்தின் சிறப்பிற்கு ஸ்ரீமத் ராமாயணம் எழுதிய வால்மீகியே ஸாக்ஷி.

வால்மீகி சரிதை

வால்மீகி ப்ராஹ்மண குலத்தில் ஓர் ரிஷி ஸம்பந்தமாகப் பிறந்தவராயினும், சிறுவயது முதல் வேடர்களால் வளர்க்கப்பட்டு வந்தமையால் வேடர் தொழிலையே மேற்கொண்டார். இவருக்கு ஒரு சூத்ரஸ்திரிமேல் காதல் உண்டாக, அவளை மணந்து அநேக பிள்ளைகளை உண்டாக்கினார், குடும்பம் பலத்துவிட்டது. தினம் அம்பும் கையுமாக யமனைப்போலக் காட்டில் உலாவி ப்ராணிகளைக் கொன்று தம் குடும்பத்தைக்காப்பாற்றி வந்தார். இதுவும் போதாமல்போக, வழி பறித்தொழிலுக்கும் இறங்கிவிட்டார். காட்டுவழியாகப் போகும் ப்ரயாணிகளை அடித்துப் பறிப்பது, அவர்கள் ஸொத்தைக் கொடுக்கமாட்டேன் என்றால் கொல்லுவது, முதலிய கொடுந்தொழிலுக்குத் தொடங்கிவிட்டார்.

இப்படி நடந்துவருவகையில், இவர் பூர்வ ஜன்மத்தில் செய்திருந்த தானமாகிய புண்யவிசேஷத்தால் ஸப்தரிஷிகள் அக்காட்டின் வழியே வரக்கண்டார். மஹா தேஜோவான்களாகிய அவர்களைக்கண்டதும் அவர்களைமறித்து 'இன்றைக்கு நமக்கு நல்ல வேட்டை' என்று மதித்து எல்லாவற்றையும் அவஸரமாகப் பறிக்கத் தொடங்கினார். திருடன் ப்ராஹ்மணன், கெட்டுப் போய்விட்டவன் என்று உணர்ந்து, ஸப்தரிஷிகள் அவனை நோக்கி, 'நீ ப்ராஹ்மணனாயிருந்தும் ஏன் இக்கொடுந்தொழிலைக் கைக்கொண்டாய்?' என்று கேட்டனர். 'நான் வேடர்களால் வளர்க்கப்பட்டு இந்நிலையிலிருக்கிறபடியால், என் குடும்ப ஸம்

சுகஷேணக்காக என் தர்மத்தை நடத்துகிறேனே ஒழிய வேறொன்று மன்று' என்று மறுமொழி பிறந்தது. அதற்கு ஸப்தரிஷிகள், "நாங்கள் இங்கேயே இருக்கிறோம். நீ போய் உன்பெண்டு பிள்ளைகளை நோக்கி,'உங்களைக் காப்பாற்ற, பாபத்தொழில்களை நான் செய்யும்படி நேருகிறதே! இவைகளின் பலத்தில் உங்களுக்குப் பங்குண்டா? என்று கேட்டுவா" என்று கூறினர்.

அவர் அவ்வாறே செய்ய அவர்குடும்பத்தார் 'நாங்கள் உன்னைக் கொடுந்தொழில் தான் செய்யவேண்டும் என்று ஏவுகிறோமா? எங்களைக் காப்பாற்ற வேண்டியது உன் கடன். நீ அதை எப்படிச் செய்தால் எங்களுக்கென்ன? நீ கொண்டுவருபவைகளில் எங்களுக்குப் பங்குண்டே ஒழிய, அவைகளைக் கொண்டுவரச்செய்யும் கொடுந் தொழில்களின் பலன்களிலாகட்டும், நற்செயல்களின் பலன்களிலாகட்டும் எங்களுக்குப் பாகமே இல்லை' என்று கூறிவிட்டனர். ஸப்தரிஷிகள் தர்சனத்தால் பரிசுத்தமான இவர் மனதில் குடும்பத்தார் கூறிய மொழி, 'எமது புண்ய பாபத்திற்கு நாமே பாத்தியப்பட்டவராகி இருக்க, வீணாக இது வரையில் கொடுந்தொழில் செய்து காலம் போக்கி விட்டோமே! யாருக்காகச் செய்தோமோ அவர்களும் என்னைத் தனிமையாகத் தவிக்கும்படி விட்டு விட்டனரே!' என்ற கனிவும் விஷய வெறுப்பும் உண்டாக, மிகுந்த பரபரப்புடன் ஓடோடியும் வந்து ஸப்தரிஷிகள் காலில் பரவசமாக விழுந்து தம் குடும்பத்தவர்கள் கூறியவைகளை எடுத்துரைத்து 'நீங்கள் தான் கதி! என்னை ஈடேற்ற வேண்டும். ரிஷி சிரேஷ்டர்களே!' என்று ஓலமிட்டழுதார்.

ரிஷிகள் மனமிரங்கி கல்வியறிவு ஒன்றுமில்லாத இவனுக்கு என்ன செய்வது என்று யோசித்து 'ராமநாமத்தை மாற்றி மரா என்று உபதேசித்து கடவுளின் மேல் கருத்தைச் செலுத்தி வெளி விஷயங்களைக் கவனியாது தாங்கள் திரும்பி வரும் வரையில் ஜபிக்க வேண்டும் என்று தாக்கீது செய்துவிட்டுப் போயினர். பக்குவகாலம் வந்துவிட்டபடியால் இவர் ஒரே மனதுடன் மரா நாமஜபம் செய்து வந்தனர். வெகுகாலம் ஸப்தரிஷிகள் வாராமல் போக, இவர்மேல் புற்றுமுளைத்து மூடிவிட்டது. ஆனாலும் அங்கு 'மராமராமராம...' என்ற சப்தம் மாத்திரம் விடாது ப்ரணவநாதம்போலக் கேட்டுக்கொண்டிருந்தது.

பின் ஒருகால் ஸப்தரிஷிகள் அவ்வழியாக வரும்படி நேர, முற்கூறிய ப்ரணவநாதம் அவர்கள் காதில்விழுந்து அக்கம் பக்

கம் சுற்றி நோக்கினர். காரணம் புலப்படவில்லை. அங்குமிங்கும் ஓடியாடி நோக்கினர். ஒரு புற்றின் அருகில் வருகையில் இந்த நாதம் உயர்ந்து கேட்க புற்றுள் நோக்கினர். தாம் முன் வேடனுக்கு உபதேசித்த விஷயம் ஞாபகம்வர அவனை வெளிவரும்படி அழைத்தனர். அவன் வெளிவந்ததும் அவனது மனம் சுத்தமாகி பரமனிலே கைகூடிவிட்டது என்று ஸப்தரிஷிகள் அவனை நோக்கி 'அப்பா! எங்கள் உபதேசம் உன் புண்ய பரிபாகத்தால் பலித்துவிட்டது. இனி உனக்கு யாதொரு குறைவும் இல்லை. உன் வேடத்தன்மைபோய் முன் ப்ராஹ்மணத்தன்மை வந்துவிட்டது. இன்று முதல் உனக்கு வேறு ஜென்மம் (மறு பிறப்பு) ஏற்பட்டுவிட்டது. உன்னை எல்லோரும் வால்மீகி (புற்றின் பிள்ளை) என்றழைக்கட்டும் என்று அனுக்கிரஹித்து மறைந்தனர். இவர் தான் ராமபக்தி விசேஷத்தால் ராம கதையைத் தம் அனுபவ விஷயம் தோன்ற ஈடுபட்டு செய்து முடித்தார்.

ராம நாமத்தில் ஈடுபட்டு மனம் சாந்தம் அடையப் பெற்றவர் அநேகர். அவர்களுள் இக்காலத்தில் ஸமீபத்திலிருந்தவர் திருவையார் த்யாகராஜ ஸ்வாமிகள். ராமபக்தி மிகுதியால் ஸ்ரீராம "நின்நாம எந்தருசிரா" என்பது போன்ற அநேக இனிய கீர்த்தனைகளைப்பாடித் தமது பக்தியை வெளியிட்டிருக்கிறார்.

அவைகளைக் கேட்டாவது பாடியாவது நாம் இக்காலத்தில் ராமபக்தி உண்டாக்கிக்கொள்ள முயலுகிறோம்.

ஸ்ரீராம உபநிஷத்துகள்.

ராம விஷயமான உபநிஷத்துக்கள் நான்கு இருக்கின்றன. அவையாவன முக்திகோபநிஷத்து, ராம ரஹஸ்யம், ராம பூர்வதாபினி ராம உத்தரதாபினி உபநிஷத்துக்கள் ஆகிய இவைகளே இவைகளுள் கடைசி இரண்டையும் சேர்த்துப் பொதுவாக ராமதாபினி உபநிஷத்து என்று தொகுக்கப்பட்டுள்ளது. இவைகள் 108 உபநிஷத்துக்களுள் முறையே 108-வது, 54-வது, 55-வது உபநிஷத்துக்களாக அமைந்துள்ளன.

இவைகளில் முக்திகோபநிஷத்தில் ஸ்ரீராமனே பரமாசாரியன், ஹனுமார் பரமானந்த சிஷ்யர். முதலில் இங்கு வேத விஷயங்கள் விபாகங்கள் 108 உபநிஷத்துக்களின் நாமங்கள் சாந்தி மந்த்ரங்கள் முதலியன ஒழுங்காக உபதேசிக்கப் படுகின்றன. பின்னர் விதேஹமுக்தி, ஜீவன் முக்தி ஆகிய பரம நிலைகளுக்கு ப்ரமாணம், ப்ரயோசனம், ஸ்வரூபம், ஸாதனம் முதலிய

அருமையான வேத ரஹஸ்யங்கள் இங்கு எடுத்து விஸ்தரிக்கப்படுகின்றன.

ராம ரஹஸ்ய உபநிஷத்தில் மஹரிஷிகளும் பகவத் பக்தர்களும் ஹநுமானை அடுத்து ஸர்வ வியாபியான பரம்பொருளைப்பற்றி வினவுகிறார்கள். அதற்கு அவன் ராமனே அவ்வஸ்து என்று கூறி, ராமன் அங்கங்கள், ப்ரணவ ஸம்பந்தமான ராம நாமச் சிறப்பு, அதை ஜபிப்பதால் அடையக்கூடிய யோக மோக்ஷங்கள், ராம விஷயமான ஸ்தோத்ராதிகள், ராம மந்திரங்கள், துதிகள், யந்திரங்கள் ஜபவிதிகள், ஆசாராதிகள் முதலியவைகளை எடுத்து விஸ்தரிக்கிறார். பின்னர் ராமநாமமே ப்ரஹ்மம் அது மாயை, ஜகத்ஸ்ருஷ்டி காரணத்வாதிகள் ஆகிய இவைகளை அடைக்கி இருக்கும் ராத்திரி, ராமாய நம: என்ற மந்திரம் இவ்வாறு தத்வமஸி வாக்யம் பொருளை உடையது என்பது, இதனால் 'நான் ராமனே' என்ற முடிவு ஸித்திப்பது; ஆகிய இவைகள் விளக்கப்படுகின்றன.

ராமதாபினி உபநிஷத்தில் முன் பாதியில் ராம என்ற நாமம் தசரதர் பிள்ளைக்குப் பொருத்தமாக இருக்கும் விதங்கள், ப்ரஹ்மத்தின் ரூபத்வ அரூபத்வ, ராமர் அங்கங்களின் உட்பொருள், ராமாய நம: என்ற மந்திரத்தின் சிறப்பு, ராமாயணக் கதைச் சுருக்கம் ஆகிய இவை அடங்கியுள்ளன. பின்னர் ராமரை அவர் தம்பிகளுக்கிடையில் ஹநுமாருக்கு எதிரே அமைத்த சக்ரத்தில் பூஜிப்பதன் பலன் கூறப்படுகிறது

பின்பாதியில் ராம நாமத்தை ஓம் என்பதோடு சேர்த்த மந்திரத்தின் ப்ரபாவம் கூறப்படுகிறது. இந்த ஷடாக்ஷரம் த்யானித்த உடன் பிரவிக்கட்டை தாண்டும்படி செய்வதால் இதற்கு தாரக மந்திரம் என்று பெயர். லக்ஷ்மணன் சத்ருக்னன், பரதர், ராமர், ஆகிய இவர்களை அ, உ, ம், அர்த்த மாத்திரையாகவும், ஸீதையை ப்ராகிருதியாகவும், கூறி இவர்கள் சேர்ந்திருப்பதை ஓங்காரமாக வர்ணிக்கிறது பின்னர் ப்ரஹ்மா ராமரை பரப்ரஹ்மமாகத் துதித்த விதம் விஸ்தாரமாகக் கூறப்பட்டுள்ளது. ராமர் காசிவிஷயமாகக் கொடுத்த வரங்கள், ஓம் ராமாய நம: என்ற ஷடாக்ஷர மந்திரராஜம். அதன் மூன்று பாகங்களின் சிறப்பு, மந்திரத்தின் சக்தி இவைகள் வருகின்றன. இவ்வாறு ராமரையே ப்ரஹ்மமாகக் கருதி, ராம நாமத்தையே தாரக மந்திரமாகக் கருதி ஏற்பட்டுள்ள இவ்வுபநிஷத்துக்களை வாசித்து நோக்கினால் ராம நாமம் கதை முதலியவைகளின் சிறப்பு உட்கருத்து ஆகிய இவைகள் நன்கு வெளியாகும்.

ஸ்ரீமத் ராமாயண வினாவிடை

இது (காலஞ்சென்ற) ம-ா-ா-ஸ்ரீ ஆ. ஸி. கஸ்தூரிரங்க ஐயர், பீ.ஏ., எல்.டி., அவர்களால் இயற்றப்பட்டது.

இதில் ராமாயண கதையின் ஏழுகாண்ட ஸாரமும், சந்தேக முண்டாகக் கூடிய நிலைமைகளுள்ள இடத்து ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தீர்க்க விசாரமும், நீதிகள் போதிக்கக் கூடிய இடத்துப் படிப்பினைகளும் காட்டி இயற்றப்பட்ட ஓர் இனிய நூல். சிறுவர் சிறுமிகளும் அறியுமாறு எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பதுமன்றி, பெரியோரது மனதையும் களிப்பிக்குமாறு, அத்யாத்மராமாயணத்திலும் ஆநந்தராமாயணத்திலும் கண்ட ராமாயணத்தின் உட்பொருளும், அநுபந்தமாக இப்புத்தகத்திற்குச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பனெழுதிய கதைக்கும், வடமொழியில் வால்மீகி எழுதிய கதைக்குமுள்ள வேறுபாடுகள் மற்றோர் அநுபந்தமாக அமைக்கப் பட்டிருக்கிறது. இப்புத்தகம் பல பாடசாலைகளில் பாடப் புத்தகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாவராலும் நன்கு மதிக்கப்பட்டது. இப்புத்தகத்திற்கென்றே இதுவரையிலும் கண்டிராத புதிய சித்திரப்படங்களுடன் ஒவ்வொரு காண்டமும் விளக்கப்பட்டிருக்கிறது. இதில் சேர்த்திருக்கும் படங்களுள் சில :—(1). இராமர் பட்டாபிஷேகம், (2). வால்மீகி ரிஷி வேடனைச் சபிக்க, இராமாயணம் பிறந்தது, (3). ஸீதா கல்யாணம், (4). குஹன் ராமர் முதலியோர்க்கு ஓடம் விடுதல், (5). சபரி ராமருக்குப் பழங்கொடுத்துப் பரமபதம் பெற்றது, (6). இராமரும் ஸுக்ரீவனும் அக்கினிசாக்ஷியாக ஸ்நேகம் செய்துகொள்வது, (7). ஹநுமார் பக்திப் பிரபாவத்தால் கடலைத் தாண்டுதல், 8. ஹநுமார் பக்தி பரவசத்தால் சஞ்சீவி பர்வதம் கொண்டுவருதல். (9). ஸீதை அசுவமேத மஹாமண்டபத்தில் தனது கற்பை நிலை நிறுத்த பூப்பிரவேசம் செய்தல் முதலியன. இப்புத்தகத்தின் விலையும் குறைத்தே வைத்திருக்கிறது. இது துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றது.

விலை ரூபா. 1—8—0

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

சிவகுமாரன்

அல்லது

கொலைஞன் யார்?

ஆரம்ப முதல் ஈறுவரையில் படிப்பவர் மனத்தைத் தன் வயப்படுத்தி மயக்கும் ஒரு சரிதை. இனியதும் எளியதுமான தமிழ்நடையில் எழுதப்பெற்றது. இப்புதிய நவீனம் அளவற்ற ஆநந்தத்தையும் பெறவரிய நற்போதகங்களையும் படிப்போரனை வருக்கும் அளிக்கவல்லது. வனப்பிற் சிறந்த இதன் கதாநாயகி தனது தாய்தந்தையரும் உடன்பிறந்தாரும் வறுமையிற்பட்டு வருந்துவதைக்கண்டு மனம்வெதும்பி அவர்கள் கொடுமைகளைத் தீர்க்கப் பொருள்பெறும் நோக்கத்துடன், தன் இளமைப்பருவத்தில் காதலனைத் துறந்து தனவந்தனை ஒரு கிழவனை மணந்து, தான் நன்னெறி வழுவாதிருந்தும் தன்மீது சந்தேகங்கொண்ட புருஷன் மரண காலத்தில் தன்னை வறுமையில் மடிக்கச்செய்த சூழ்ச்சியைப் பாழ்படச்செய்ய அயோக்கிய சிகாமணியான ஒரு வக்கீலின் உதவியை நாடுகிறாள். கதியிலியான அவளது கஷ்டதசையை, தான் இலாப மடையும் சந்தர்ப்பமாக்கிக் கொள்ள வெண்ணி, அவன் தன் நுட்ப புத்தியினால் அவளை ஏமாற்றித் தன் அடிமையாக்கிக் கொள்ளுகிறான். பேதைமைப் பெண்ணின் புத்தி கூர்மைபெற்று, அவளை அவன் வலையிற் சிக்காது காப்பாற்றுகிறது. அவ்வக்கீல் எப்படியோ துர்மரணமடைகிறான். அவனைக் கொன்றவர் யாரென்பது எவரும் அறியவொண்ணாத மர்மமாயிருக்கிறது. கதாநாயகியும் அவளுடைய பழைய காதலனும் ஒருவரையொருவர் சந்தேகிக்கின்றனர். அவளுடைய காதலன்பேரில் குற்றஞ்சாட்டப்பட்டு நியாய சபையில் அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்போகுந் தருணத்தில், அன்பின் மிகுதியினாலும், அதி நுட்ப புத்தியினாலும் நிஜமான கொலைஞனைக் கண்டுபிடித்த சிநேகிதனொருவன் அக்கொலைஞனை ஆஜர்செய்து கதாநாயகனைக் காப்பாற்றுகிறான். படிக்கப் படிக்க ருசியாயிருக்கும். இதன் விலை ரு. ஒன்றே.

ஷண்முகசுந்த்ரம்

அல்லது

= காதல் திறம் =

(பி. எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ., அவர்கள் எழுதியது.)

தெய்வபக்தியிற் சிறந்த தாய்தந்தையர்களால் அன்புடன் வளர்க்கப்பட்டு மிகவும் பழிக்கஞ்சும் குணத்தினால் அற்பச் சங்கதியைப் பெரிதாகமதித்து, உயிர் துறக்கக் கடலுக்குச்சென்று பயந்து, தன்னிருப்பிடந் தெரியாமல் ஓடி, வேறோர் நாட்டில மாறுவேடம் பூண்டு, போலீஸ் இலாகாவில் சேர்ந்து சிறந்த துப்பனெனப் பெயர்பெற்றும் துக்கக்கடலில் ஆழ்ந்தவனாகக் காலங்கழித்துவந்த ஷண்முகசுந்தரத்தின் மனைவியான பத்மலோசனியெனும் இளங்குமரி, தன்னாயகன் கடலில் இறந்தானென்றெண்ணி வைதவ்யமான துக்கசாகரத்தில், சகோதரன் மனைவி தனக்கிழைத்த துன்பம் சகியாது, தன்னாயகனைப்போல் உயிர் துறக்க வெண்ணி வெள்ளம் புரண்டுவரும் காவிரி நதிக்குச்சென்று தன்னுயிரை மாய்த்துக்கொள்ளமுடியாது மயங்கி வீழ்ந்து, அம்மயக்கத்தில் கண்ட இரு காட்சிகளினால தன்னாயகன் இறக்கவில்லையெனத் துணிந்து, ஆண்வேடம்பூண்டு, மாந்தளையில் வசித்த தன் மாமனார் வீட்டுக்குசசென்று வேலைக்காரனாக அமர்ந்து, கடலிலிருந்து அகப்பட்ட பிணம் தன்னாயகனுடையதல்லவென இரு படங்களினாற் கண்டுபிடித்துத் தன் மாமியாருக்கும் மாமனாருக்கும் தெரிவித்து, சென்னைத துப்பனொருவனுடன் சென்னைக்குவந்து தன் புத்திசாதுர்யத்தினால் தன்னாயகன் கல்கத்தா சென்றானென விசாரித்துத் தெரிந்துகொண்டு அங்கேசென்று அவ்வூரில் முதன்மையான துப்பனான ஷண்முகசுந்தரத்தின் உதவியை நாடி அவனிடம் சென்று அவனே தன் நாயகனெனக்கண்டு களிக்கிறாள். எளிய நடையில் எழுதப்பெற்றது. எட்டு அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை ரூ. 2. பூராவும் காலிகோ பைண்ட்செய்தது ரூ. 2-8-0.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

மு ர ளீ த ர ன்

(ஓர் இந்திய மாதால் எழுதப்பட்டது.)

மிகவும் ஆநந்தத்துடன் எல்லோரும் கருதக்கூடிய மாசற்ற இளம்பருவத்தின் இன்பமும், நம் மதத்திற்குரிய சிறந்த விவாக விமரிசைகளும், அவ்விவாக காலத்தில் ஏற்படும் கோலாகலங்களின் அழகும், ஜகத் ரக்ஷகியாய், ஸகல ஜீவ தயாபரியாய் ஜகன்மாதாவாய் விளங்கும் ஈசுவரியின் சிறப்பும், அவளது பக்தியி லீடுபட்டு நிற்கும் பக்த கோடிகளின் உயர்வும், கடற்கரைக் காட்சியும், உண்மை நட்பின் பெருமையும், ஊராருடன் வீண்வம்பு பேசுவதனால் வரும் தீங்கும், அன்புள்ள காதலர்களின் மனோநிலையும், பெருமையின் சிறப்பும், எளிய நடையில் சிறுமியரும் உத்ஸாகத்துடன் வாசிக்கும் வண்ணம் எழுதப்பட்டிருக்கிறது. அழகிய ஆப்டோன் சித்திரப் படங்களும் கொண்டது. விலை அணு 10.

கு ண் ட ல கே சி

அல்லது

தற்கொல்லியை முற்கொன்றவன்

தமிழ் மொழியிலே " பஞ்ச காவியங்கள் " என்று கற்றோரால் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம். வளையாபதி. குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் ஒன்றான குண்டலகேசி என்னும் நூல் இக்காலத்தில் இல்லை ; பண்டைக் காலத்திலேயே அஃது இறந்தொழிந்ததுபோலும். ஆனால், இந்நூல் எதைப்பற்றிக் கூறுவதென்பது, இப்போது காணப்படும் சில செய்யுட்களைக்கொண்டும், பிற சாதனங்களைக்கொண்டும் ஒருவாறு அறியக்கிடக்கிறது. அவைகளை ஆதாரமாகக்கொண்டு நாகை ஸ்ரீகோபாலகிருஷ்ண பிள்ளை இந்நாவலை மிக உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். இது சரித்திர சம்பந்தமான நாவலாகும். பௌத்த தர்மங்களைப்பற்றியும் இந்நாவல் விவரித்துக் கூறுகின்றது. இந்நாவலின் கம்பீரமும் அழகும் வாய்ந்த இனிய வசன நடை. படிப்போர் மனதைப் பெரிதும் பரவசப்படுத்தும்படியான வகையில் அமைந்திருக்கிறது. புதிய பதிப்பு விலை அணு 6.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

தஞ்சை நாயகர் தாழ்வு

— விதியின் வலிமை —

நான்கு ஆப்டோன் படங்களுடன் ரூ. 1.

(பி.எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ., எழுதியது.)

இந்நூல் நமது தென்னாட்டுப் பூர்வ சரித்திரத்தை யொட்டி எழுதப்பெற்ற ஓர் இனிய நாடகம். இப்போது நமது நாட்டுப் பண்டைய சரித்திரத்தை யாவரும் எளிதிலறியுமாறு இந்நாடகம் எழுதப்பட்டுள்ளது. பண்டு விஜயநகரத்தில் அரசு புரிந்துவந்த ராயர் வம்சத்து அரசர்களால் பாண்டிய வரசர்களின் வேண்டுகோளின்படி அனுப்பப்பட்டு, பாண்டியவம்சம் நசித்துப் போனதனுல் அவர்களது நாட்டைத் தம்முடையதாக்கிக்கொண்டு ராயர் வம்சத்தரசர்களுக்குப் பிரதிநிதிகளாக, மதுரையிலும் தஞ்சையிலும் ஆண்டுவந்த நாயகவம்சத்து அரசர்கள் ஒருவரோடொருவர் மாறுபட்டுப் பொருததில், தஞ்சை நாயகர் வம்சம் அழிந்து மஹாராட்டியர் தஞ்சையைக் கைப்பற்றிக்கொள்ளச் சமயம்வாய்த்த சரித்திரத்தை நடந்தவாறு உண்மைதவருது விநோதமாக எடுத்துக்கூறியிருக்கிறது. நாடக பாத்திரர்களில் ஒவ்வொருவருடைய அந்தரங்க எண்ணங்களையும் அற்புத சக்தியுடன் ஊகித்தறிந்து அவரவர்களது வார்த்தைகளில் அவைகள் மறைந்து தோன்றுமாறு எழுதிய சாதுர்யம் பெரிதும் மெச்சத்தக்கது. ஊழ்வலி யாவற்றினும் பெரிது என்னும் நீதியைப் பல சந்தர்ப்பங்களில் தெளிவாக விளக்கிக்காட்டியிருக்கிறது. நடிப்பதற்கு யோக்கியமாக பல அகவல்களையும் கீர்த்தனங்களையும் இந்நாடகத்துக்கென்றே பாடி அமைத்திருக்கிறது. நாடகத்தமிழின் இலக்ஷணங்களனைத்தும் வாய்ந்த இந்நூல், படிப்பவர் கேட்பவர், நடிப்பவர், பார்ப்பவர் ஆகிய யாவர் மனத்தையும் கவர்ந்து களிப்பூட்டி அறிவைப் பெருக்குமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. விலை நபாய் ஒன்றே.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

ஸ்ரீ ராமாயண ஸாரம்

விலை — (முதல் பாகம்) — ரூ. ஒன்று.

(அநேகம் அழகிய ஆப்டோன் படங்களுடன்.)

பாலர், பெரியோர் இருவருக்கும் உபயோகமாகும்படி எளிய நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.—* * எளிய நடையில் இரு பாலர்க்கும் உபயோகமாகும்படி இனியநடையில் இடை இடையே கற்பனைபொதிந்து விளங்கும்படி எழுதப் பெற்றது. இதைப் பள்ளிக்கூடங்களில் பலவிதமாயும் உபயோகப் படுத்தலாமென்பது எமது திடமான நம்பிக்கை.

தேசபக்தன்.—இது மிகச் சிறந்த நூலாகக் காணப்படுகின்றது. எளிநடையில் மிக இனிமையாக எழுதப்பட்டுள்ளது. கல்லூரி மாணுக்கர்களுக்கும் பிறர்க்கும் இது பெரிதும் பயன்படுமென்பது எமது உறுதியாதலின் இதனை அவர்களெல்லோரும் வாங்கி வாசித்தற்குரியவர்.

The New India.—The book is written in elegant Tamil. Apart from its value as an epitome of the story, it will be also useful **as a religious Text-Book in our Secondary Schools**.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

வியாஸ விதானம்

இது

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி.,

அவர்கள் இயற்றியது.

பசு, விகடப் பறவை, புலி, தென்னைமரம், கடிகாரங்கள், காவிரி, விடுமுறை யாத்திரை, வீடுநெருப்புப்பற்றி எரிதல், வித்தியாரணிய சுவாமிகள், மைகேல் பாரடே, தர்மாபிலேக் காவல், சிவாஜியும் அப்ஜல்கானும், ஆறுகள், தபால் ஒழுங்கு, கம்பியில்லாத் தந்தி, பள்ளிக்கூடப் பூர்ண ஏற்பாடு, பழகப் பழகப் பாலும் புளிக்கும், குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற் போல, ஜீவகாருணியம், பொய்யுரைத்தல், மிதச்செலவு, போட்டி, மனோராஜ்யம், கம்பர், வெர்ட்ஸ்வொர்த், சீதோஷ்ணஸ்திதியும், மனோநிலையும்.

இவை முதலாகிய விஷயங்களைப்பற்றிய அருமையான வியாஸங்கள் கொண்டது. சித்திரப்படம் அடங்கியுள்ளது. மாணவர்களுக்கேற்ற புத்தகமென துரைத்தனத்தார் அங்கீகரித்தது. விலை அணா **12.**

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்

இந்நாவல் பெயர்பெற்ற துட்பஞன ஷண்முகசுந்தரத்தின் துட்புத்திறத்தை நன்கு விளக்கிக் காட்டுகிறது. மிகவும் எளியநடை எடுத்தவர் படித்து மூடிக்காமல் கீழே வைக்கமுடியாது. 4-படங்களுடன் ரூ. 1.

சில முக்கிய அபிப்பிராயங்கள்

ஸ்ரீமான் வா. சு. செங்கல்வாராய பிள்ளை அவர்கள் எம்., ஏ.,—* கதையின் சுவையும் கற்கண்டின் சுவைபோல ஒரே தன்மையதாய் முதன்முதல் இறுதிவரையும் நன்கு அமையப்பெற்றுள்ளது. இந்நூலின் முக்கிய புருஷஞன ஷண்முகசுந்தரத்தின் துப்பறியும் திறமும், பக்தியின் சிறப்பும், உத்தம குணங்களும் படிப்பவர் மனத்தைக் கவரத்தக்கன.

New India.—This is an original detective tale in Tamil. The hero of course, is the detective Shanmugasundaram, who has already made himself popular as the hero of a novel bearing that name and written by the same author * * * * The story is full of interest from beginning to end.

The Hindu.—* This is an interesting detective novel * The story is designed to bring out the strength and value of chastity for womenfolk and as such the book deserves to be placed in the hands of all young girls. The style is simple and the printing good.

சுதேசமித்திரன்.—* * * படிக்கப் படிக்க அறிவையும், தெய்வபக்தியையும், கற்பின் மகிமையையும், பசுமரத்தாணிபோல், மனதில் பதியுமாறு இப்புத்தகம் எழுதப்பெற்றிருப்பதால் இதனைப் படிப்போர் பயனடைவார்களாக.

தேசபக்தன்.—* * தெள்ளியநடையில் எழுதப்பெற்று பல சித்திரப்படங்களோடு கூடியது. * * ஒவ்வொருவரும் இதனை வாங்கி அவசியம் வாசிக்கவேண்டியதே.

நவசக்தி.—இந்நூலுக்கு உயிர்நாடியாகவுள்ள ஷண்முகசுந்தரம் தன்னிடம்ஒப்புவிக்கப்பட்டகுற்றத்தை ஆராய்ச்சி செய்வதில் காண்பிக்கும் சாமர்த்தியங்கள் போற்றத்தக்கனவாயிருக்கின்றன. இந்நூலைப் படிக்குங்காலத்து உள்ளத்தில் ஒருவித இன்பம் உண்டாகிறதென்பதை ஈண்டுக்குறிப்பிடவிரும்புகிறோம். இதை ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவது அவசியம்.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

அம்பலவாணன்

அல்லது

நாவாய்க் கைதி

(பி. எஸ்., சுப்பிரமணியம், எம்.ஏ., எழுதியது.)

மேனாட்டுக் கதாசிரியர்களில் முதன்மைபெற்றவரான "விக்டர் ஹ்யுகோ" என்பவரியற்றிய "லெஸ்மிஸரபில்ஸ்" என்னும் அற்புதச்சரித்திரத்தை, நமது இந்தியப்பழக்கவழக்கங்களுக்கு ஒற்றுமைப்பட அமைத்து இயற்றிய இவ்வற்புத நவீனம், பண்டு பாண்டிய நாட்டில் அம்பலவாணன் என்ற ஏழை, வயிற்றுக்கில்லாமல் வருந்தும் தன் சகோதரிகுழந்தைகளுக்காக ஒரு சிறு பணியாரத்தைத் திருடி, நாவாய்க்கைதியாக விருக்கும்படி தண்டிக்கப்பட்டு, பத்தொன்பது வருஷகாலம் நினைக்க மனம் நடுங்கும் கொடுமைகளை யனுபவித்து ஜனசமூகத்தின் மேல் பழிதீர்க்கவேண்டுமென்ற நிச்சயத்துடன் கொடுந்தொழிலில் பிரவேசிக்குங்கால், பரமகுருவாய்த் தோன்றி அவனுக்கு சன்மார்க்கத்தை உபதேசித்த ஒரு தம்பிரானது நற்குணத்தையும் நல்லொழுக்கத்தையுங்கண்டு தீயநெறியைவிட்டு நன்னெறியைச்சார்ந்து தனது ஊக்கத்தினால் தனவந்தனாகி அரசனால் நன்குமதிக்கப்பட்டுப் பெருவாழ்வுற்றிருந்த நாளில், காவலாளர் மற்றொரு ஏழையைத் தானென மருண்டுபிடித்துத் தண்டிக்க முயலுவதாகக் கேள்விப்பட்டு, தானறிந்தும் வாளாவிருப்பது தருமமன்றெனத் துணிந்து, வாழ்வின்மீதிருந்த ஆசையைத் துறந்து தான் இன்னானெனக் காவலாளரிடம் தெரிவித்து அவர்கள் தன்னைச் சிறைப்படுத்தியதும், தன் அபூர்வ மகிமையினால் சிறையினின்றும் தப்பியோடி தனது துக்க வாழ்க்கையை முடிப்பதை கல்லனைய மனமுங் கரையும்படி இனியதும் எளியதுமான நடையில் எழுதப்பெற்றது.

ஒவ்வொரு பாகத்துக்கும் நான்கு அழகிய ஆப்டோன் படங்கள் உண்டு. இரண்டு பாகங்களும் சேர்ந்து விலை ரு. 3.

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

மோகனாங்கி

அல்லது

காணமற்போன பெண்மணி

ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல்

இக்கதாநாயகியாகிய மோகனாங்கி யென்பவள் சிறு குழந்தையாயிருக்கையில் காணமற்போவதும், அவள் கள்வர் கையிற் சிக்கித் துன்புறுங்காலத்து துப்பறியும் திருநாவுக்கரசென்பவர் வெகு சாமர்த்தியமாய் அப்பெண்ணை மீட்டு அவள் நெருங்கிய உறவினரான சுந்தரமுதலியாரிடம் அவளை ஒப்புவிக்க, அவள் மரகதம் என்ற பெயருடன் வளர்வதும், கள்வர் தலைவனான முனிசாமியைத் துணையாகக்கொண்டு குருநா[illegible] என்பவன், கோபால கிருஷ்ணபிள்ளை யென்னும் மாறுபெயரோடு வாழ்ந்துவந்த சுந்தரமுதலியாரின் இரகசியம் அறிந்து அவரைக்கொலைசெய்து, தன்னைப் பழிசாராவண்ணம் அற்புதச் செயல்கள் செய்து, மோகனாங்கியைக் கோலார் சுரங்கத்தில் கொண்டுபோய் ஒளித்துவைப்பதும், திருநாவுக்கரசு வெகு திறமையுடன் அக்கொலையைக் கண்டுபிடித்துப் போலீஸாரின் தீர்மானங்கள் பிசகானவையென்று நிரூபித்துக்காட்டி, கொலைஞனையும் கள்வர் கூட்டத்தையும் பிடித்துக்கொடுத்து மோகனாங்கியை விடுவிப்பதும், முடிவில் அவரே அவளை மணந்து இன்புறுவதும் இந்நூலின் விவரிக்கப்பட்டுள்ளன. தற்கால நாகரிகச் சீர்கேடும், ஒழுக்கங்களின் மேன்மையும் இக்கதையால் விளங்குகின்றன. புருடபாரியர் இயல்பு, நட்பின் பெருமை, நாடகவியல்பு முதலிய அரிய விஷயங்களடங்கியுள்ள இப்புத்தகத்திலிருந்து பெறப்படும் நீதிகள் பலவுள. படிக்கப்படிக்க சுவையை மேன்மேலும் ஊட்டும் இந்நாவல், ஆண், பெண் இருதிறத்தினரும் எளிதிற் படித்து ஆனந்திக்கும்படி செவ்விய தமிழ் நடையில் வரையப்பட்டுள்ளது. விலை ரூபாய் **1-4-0.**

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

2710

இயற்கை = = =

= = அற்புதங்கள்

பி. எஸ்., ஹைஸ்கூல் முதல் ஆசிரியர் ஆ. வீ. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி., அவர்கள் இயற்றியது.

ஸ்கூல் இன்ஸ்பெக்டர், ராவ் பகதூர் எல். வீ. வில்லியம்ஸ் பிள்ளையவர்கள் எழுதிய சிறந்த முகவுரையுடன் கூடியது. சித்திரப்படங்கள் அடங்கியுள்ளது.

இதில் அடங்கிய விஷயங்கள்

மானேஜர், விவேக போதினி, மயிலாப்பூர், சென்னை.